DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

Residential & Commercial
Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1556 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 30, 2026

# "எமது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் லோகன் கணபதி அவர்கள் கனடிய தமிழர்களின் சிறந்த அர்ப்பணிப்புகளுக்கு அடையாளமாகத் திகழ்கின்றார்!"

## மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி நடத்திய பொங்கல் விழாவில் மாகாண முதல்வர் டக் போர்ட் புகழாரம்!

"எமது ஒன்றாரியோ கொன்சர்வேர்ட்டிவ் அரசாங்கத்தில் மாகாண சபை உறுபபினராகவும் பாராளுமன்றச் செயலாளராகவும் அங்கம் வகிக்கும் நண்பர் லோகன் கணபதி அவர்கள் கனடியதமிழர்களின் சிறந்த அர்ப்பணிப்புகளுக்கு அடையாளமாகத் திகழ்கின்றார்! அவரது அர்ப்பணிப்பையும் சேவை மனப்பான்மையையும் நான் அவரோடு பழகத் தொடங்கிய அல்லது பணியாற்றத் தொடங்கிய காலம் தொடக்கம் அவதானித்துள்ளேன். இன்று நீங்கள் அனைவரும் அவரது வழிகாட்டலில் இன்று உங்கள் பண்பாடு மற்றும் கலைகளைப் பேணுதருக்கு உதாரணமாக விளங்கும் பொங்கல் மற்றும் தமிழர் மரபுரிமை மாதம் ஆகியவற்றை ஒரே குடையின் கீழ் கொண்டாடுகின்றீர்கள். எமது மாகாண அரசாங்கமும் இவ்வாறான தமிழர்களின் பண்பாட்டு விழாக்களுக்கு ஆதரவு வழங்குவதில் பெருமிதம் அடைகின்றது" என்றார்.

ஸ்காபுறோவில் இயங்கிவரும் "விஜயா யுவல்லறி" தங்க நகை விற்பனை நிறுவனம் மேற்படி "பொங்கல் விழாவிற்கு பிரதான அனுசரணை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 11ம் பக்கம்)





## UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2026

உலகெங்கும் பேசப்பெறும் கனடா உதயன் சர்வதேச விருது விழா 2026 06-06-2026 அன்று கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ளது. விருது விழா தொடர்பான மேலதிக விபரங்களுக்கு uthayannews@yahoo.com என்னும் மின்னஞ்சல் மூலமாகவோ அன்றி 416 732 1608 அல்லது 647 854 8384 ஆகிய தொலைபேசி இலக்கங்களிலோ தொடர்பு கொள்ளவும்.

# "அனைத்துலக தமிழர் பேரவை" செயற்பாடுகளில் தாயகத்தில் வடக், கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பணிகளுக்கே முக்கியத்துவம்!"

## இங்கிலாந்து பொங்கல் விழாவில் அமைப்பின் தலைவர் கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி தெரிவிப்பு!



24-01-2026 அன்று சனிக்கிழமை இங்கிலாந்தின் இலண்டன் மாநகரில் நடைபெற்ற "அனைத்துல தமிழர் பேரவையின் "பொங்கல் விழா 2026" அனைத்துலக தமிழர் பேரவை" அமைப்பின் தலைவர் கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அமெரிக்கா வாழ் சட்டவல்லுனர் மார்க்கண்டு விக்னேஸ்வரன், அவர்கள் சிறிய நூல்வடிவில் அச்சடிக்கப்பெற்ற "அனைத்துலக தமிழர் பேரவையின் யாப்பு தொகுப்பை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். தொடர்ந்து யாப்பின் பிரதிகள் அங்கு அழைக்கப்பெற்றிருந்த சிறப்புவிருந்தினர்கள் மற்றும் பேச்சாளர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கு கையளிக்கப்பெற்றன. (தொடர்ச்சி 10ம் பக்கம்)

தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில் எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்
SMART RESTORATION
ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
info.smartrestoration@gmail.com
smart-restoration.net
647-849-4444 (Cell)
1-833-SMART 09 (Office) (76278)
Water and flood services • Mold remediation • Trauma • Sewage clean up • Fire & smoke • 24/7/365 days
LICENSED INSURED CERTIFIED

GL PRIME LEGAL SERVICES
இலவச சட்ட ஆலோசனை 905 334 6851
Immigration Law Family Law Criminal Law
• PR APPLY • SPONSORSHIPS • WORK PERMIT
• SUPER VISA All Other Legal Services
www.glprimelegal.ca ERAA PLAZA Unit #231

# இலங்கையின் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆண்டு தோறும் நடத்தும் தேசிய கலை இலக்கியப் பெருவிழாவில் யாழ். மாவட்டத்துக்கு கிடைத்த 5 விருதுகள்!









இலங்கையின் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆண்டு தோறும் நடத்தும் கலை இலக்கியப் போட்டிகளில் தேசிய மட்டத்தில் சாதித்தவர்களுக்கான விருது வழங்கும் வைபவம் கடந்த அன்று 24.01.2026 சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இந்த விருது வழங்கும் விழாவில் சண்டிலிப்பாய் பிரதேசத்துக்கு ஐந்து தேசிய விருதுகள் கிடைக்கப்பெற்றது.
பிரதேச மட்டம் மற்றும் மாவட்ட மட்டத்தில் முதலாமிடங்களைப் பெற்று தேசிய மட்டத்தில் ஐந்து போட்டிகளில்
தேசிய மட்டத்தில் சாதித்து பிரதேசத்துக்குப் பெருமை தேடித்தந்த சாதனையாளர்களின் விபரங்கள் வருமாறு.

1) ஹதிறந்த பிரிவு கவிதையாக்கம்ஹ
முதலாமிடம் : திரு. தம்பித்துரை குணத்திலகம் (சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு)
2) ஹதிறந்த பரிவு நாட்டார் கலைகற்றல் (ஆய்வு)ஹ
இரண்டாமிடம் : செல்வம் அபிராமி (அல்லுண்ணி வீதி, சண்டிலிப்பாய்)
3) ஹதிறந்த பரிவு பாடலாக்கம்ஹ
மூன்றாமிடம் : திரு. தம்பித்துரை குணத்திலகம் (சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு)
4) “அதி சிரேஷ்ட பிரிவு பாடல் நயத்தல் போட்டிஹ
முதலாமிடம் : செல்வி த. அக்டோபர் ஷரா - (யா.ஃ. மானிப்பாய் மகளிர் கல்லூரி)
5)ஹசிறுவர் பிரிவு கையெழுத்துப் போட்டிஹ இரண்டாமிடம் : எஸ். வயோமிகா (யா.ஃ.மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை)

விருது மற்றும் சான்றிதழுடன் பணப்பரிசாக முதலாமிடம் பெற்றோருக்கு பதினைந்தாயிரம் (15,000) ரூபாவும்
இரண்டாமிடத்துக்கு பன்னிரண்டாயிரத்தி ஐநூறு (12,500) ரூபாவும் மூன்றாமிடத்துக்துக்கு பத்தாயிரம் (10,000) ரூபாவும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்

# ரி20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர்ப் போட்டியின் வெற்றிக்கிண்ணம் யாழ்ப்பாணத்திற்கும் எடுத்துவரப்படவுள்ளகிறது!

ரி20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கையில் இடம்பெறவுள்ள நிலையில், தொடருக்கான கிண்ணம் யாழ்ப்பாணத்துக்கும் எடுத்துவரப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ரி20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் ஆட்டங்கள் இம்முறை இலங்கையிலும் இந்தியாவிலும் நடைபெறவுள்ளன.

பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி நெதர்லாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் கொழும்பில் நடைபெறும் ஆட்டத்துடன் உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாகின்றது.
இவ்வாறான நிலையிலேயே தொடரை நடத்தும் நாடு என்ற அடிப்படையில், இலங்கையில் கடந்த வாரம் உலகக்கிண்ணம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 30 ஆம் திகதிவரை இந்த உலகக்கிண்ணம் இலங்கையில் பல்வேறு நகரங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது. இதற்கமையவே யாழ்ப்பாணத்துக்கும் கிண்ணம் எடுத்துவரப்படும் என்று தெரியவருகின்றது.

# தலைமன்னார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபரின் சேவை நலன் பாராட்டு விழா சிறப்பு விருந்தினராக இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் ஜோசப் ஸ்டாலின்







மன்னார் நிருபர் (28-01-2026)

தலைமன்னார் துறை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடமையாற்றி தனது சேவையை நிறைவு செய்து ஓய்வு பெறும் அப் பாடசாலையின் அதிபர் ஜேசுதாசன் விஜயகுமார் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா 28ம் திகதி அன்றைய தினம் புதன்கிழமை (28) பாடசாலையில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் கலந்து கொண்டார்.
இதன் போது குறித்த பாடசாலையில் பல வருடங்களாக கடமையாற்றி ஓய்வு பெரும் அதிபர் ஜேசுதாசன் விஜயகுமார் அவர்களை மாலை அணிவித்து இசை வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டார். பின் நிகழ்வுகள் இடம் பெற்றது.
இதன் போது பாடசாலை அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறும் ஜேசுதாசன் விஜயகுமார் கௌரவிக்கப் பட்டதோடு ஆசிரியர் களுக்கான சேவை நலன் பாராட்டு இடம் பெற்றது. சிறப்பு நிகழ்வாக பாடசாலையில் பணி சேவையில் நிறைவு பெறும் அதிபர் ஜே.விஜயகுமார் அவர்களின் அகவை 60 நிறைவில் பதிவுகள் “விஜயாலயம்“ என்ற மலர் வெளியீடு நடைபெற்றது.
குறித்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் உள்ளடங்களாக பலர் கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்

Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com







## இலங்கை அரசியலில் அனைத்து கட்சிகளிலிருந்தும் நீண்ட காலம் "நன்கு அனுபவித்த" அரசியல்வாதிகள் தாமாக ஒதுங்கிக் கொள்ள "அழுத்தம்" கொடுக்க வேண்டும்!

முழு இலங்கையையும் பரிபாலனம் செய்யவும், அந்த தேசத்தின் பொருளா-தாரம் வீழ்ச்சியடையாமல் இருக்கத் தேவையான முன்னேற்பாடுகள் அல்லது நடவடிக்கைகள் ஆகியவற்றை கவனிப்பதற்கும் மற்றும் பல ஆட்சி முறைகளை நேர்மையாக கடைப்பிடிக்கவுமே ஜனாதிபதியும் பிரதமரும் எதிர்க்கட்சித் தலை-லவரும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களுக்கு
மேலாக அமைச்சர்களும் அதிகாரிகளும் தேர்ந்தெடுக்கப்பெற்றும் நியமனங்களைப் பெற்றும் தங்கள் பணிகளை ஆரம்பிக்கின்றார்கள்.
இலங்கையின் ஒன்பது மாகாணங்களைச் சேர்ந்த 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த பாராளுமன்றத்தை அலங்கரிக்கின்றார்கள். அவர்களில் பெரும்பான்மையினரான சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் என வெவ்வேறு கட்சிகளிலிருந்து தேர்நதெடுக்கப்பெற்று ஜனநாயக முறையில் எவ்வாறு தேர்தல் நடத்தப்பெறுகின்றதோ அதே போன்று பாராளுமன்றமும் இயங்கவேண்டுமென்ற எதிர்பார்ப்போடு தான வாக்காளப் பெருமக்கள் அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுத்து வருகின்றார்கள்.
இவ்வாறான அரசியல்வாதிகளில் தமிழ் பேசும் மக்களது பாராளுமன்ற உறுப்பினர்களும் இஸ்லாமிய மக்கள் அனுப்பிவைக்கும் பாராமன்ற உறுப்பினர்ம் சிங்கள மக்கள் தேர்தெடுத்து அனுப்புபவர்களை விட பொறுப்புக்கள் அதிகம் உள்ளவர்கள் என்று அனைவருமே எதிர்பார்க்கும் விடயம் நீதியின் அடிப்படையில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே!
இவ்வாறாக இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் 70 ஆண்டுகளுக்கு மேலாக நாம் மேற்குறிப்பிட்ட சிறுபான்மை இன மக்களும் அவர்களுக்குள் அடங்கும் மலையக மக்களும் அவர்கள் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களாலும்
அரசியல் தலைவர்களாலும் வஞ்சிக்கட்டுள்ளார் என்பதே கடந்த காலம் தொடக்கம் இன்றுவரையும் மறைமுகமாக மேற்கொள்ளப்பெறும் ஒரு விடயம் என்பதை அனைவரும் புரிந்து கொண்டிருக்க மாட்டார்கள்.
குறிப்பாக மலையக மக்களைப் பொறுத்தளவில மலையகத தோட்டத் தொழிலாளர்களின் சந்தாப் பணத்தில் தங்களை வளர்த்துக் கொண்டவர்கள் பின்னர் அரசியல் பதவிகைளயும் அவர்களது வாக்குகள் மூலமாகப் பெற்றுக்கொண்டு தங்களுக்கு வாக்களித்தவர்களுக்கு எவ்விதமான வி-டிவையும் தேடித்தராமல் தங்களை செல்வந்தர் என்ற நிலைக்கு கொண்டு வந்தனர். அவ்வாறு அவர்கள் பொருளாதார ரீதியாகவும் அரசியல் பலம் பெற்றவர்களாகவும் வாழ்க்கை உயர்ந்தபடியால் அவ்வாறான பதவிகள் தங்கள் குடும்பத்தில் மாத்திரம் வாரிசுக்கள் என்ற அடிப்படையில் தொடர வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினார்கள் . இதற்கு உதாரணமாக சௌயமூர்த்தி தொண்டமான், அவரைத் தொடர்ந்து ஆறுமுகம் தொண்டமான் பின்னர் செந்தில் தொண்டமான் ஜீவன் தொண்டமான் என பரம்பரை அரசியல் தொடர்ந்தாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித விடிவும் ஏற்படவில்லை. உதாரண-மாக தோட்டதட் தொழிலாளர்களின் சம்பள உயர்விற்காகப் போராடுகின்றோம் என்று வெளியில் அறிக்கைகளை விடுபவர்கள் தோட்ட முதலாளிமாரிடமிருந்து "சன்மானங்களைப்" பெற்றுக் கொண்டு தொழிலாளர்களுக்கு "துரோகம்" இழைத்தவர்களாக மாறிவிடுகின்றனர்
இதே போன்று இஸ்லாமிய மக்கள் தேர்ந்தெடுத்த பல அரசியல்வாதிகள் ஆரம்பத்தில் கொழும்புத் தலைநகரில் வாழுகின்றவர்களாகவே இருந்தார்கள். கொழும்புத் தலைமைகள் என்று அடையாளமிடப்படட அவர்கள் கொழும்பிலுள்ள இஸ்லாமிய முதலாளிகளுக்கு சலுகைகளையும் உதவிகளையும் செய்து அவர்களிடமிருந்து பெரும் நிதியினால் செல்வந்தர்களாகவே வாழ்ந்து மடிந்தார்கள். அனால் சாதாரண மத்தியதர மற்றும் ஏழை இஸ்லாமியர் வஞ்சிக்கப்பட்டவர்களாகவே தொடர்ந்தும் உள்ளார்.
உதாரணமாக ரவூப் ஹக்கீம் போன்றவர்கள் கொழும்பில் எந்தக் கட்சி வந்தாலும் அமைச்சர் பதவிகளைப் பெறுவற்காக மக்களுக்கு பொய் வாக்குறுதிகளையும் வழங்கி தங்கள் "சுகபோக" வாழ்க்கையை மாறி மாறி வரும் அரசாங்கங்களின் வாயிலாக தொடர்வதற்கான வழிகளை ஏற்படுத்திக்கொள்வார்கள். இதில் குறிப்பாக ரவூப் ஹக்கீம் போன்றவர்கள் அவர்களது சொந்த மக்கள் மத்தியில் பல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி தலை குனிந்தவர்களாகவே தற்போதும் அவர்களது அரசியல் பயணம் தொடர்கின்றது. சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு தங்கள் உரைகளையும் அறிக்கைகளையும் மக்களிடத்தில் காட்டி "பிழைத்துக் கொள்ளத் தெரிந்தவர்கள் அவர்கள்.
இவ்வாறு வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்பவர்களும் இவர்களுக்கு விதி விலக்கானவர்கள் அல்லது. இறுதியாக எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்ற எமது சம்பந்தர் ஐயா கூட அந்தப் பதவிஐயு இழந்த பின்னரும் அரச மா-ளிகையில் வாழ்வதற்கு மகிந்தா-கோட்டாபாய மற்றும் ரணில் ஆகியோரால் அனுமதிக்கப்பெற்றார். அதற்கு காரணம் பல தடவைகள் மேற்படி தலைவர்கள் மீது பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்களின் போது அவர்களைத் தப்பிக்க வைக்க பலருக்கு "சன்மானங்கள்" வழங்கப்பெற்றன. இவ்வாறு சம்பந்தர் ஐயாவின் வழிகாட்டலில் வாக்களித்தவர்களுக்கு அவர்கள் ர்களது பொருளாதார நிலை உயர்ந்து அவர்களும் செல்வந்தர்கள் என்ற வளமிக்க வகுப்பினராக மாறிவிட்டார்கள்.
இவ்வாறு அடுக்கிக் கொண்டே சென்றால் பலரது உண்மையான முகங்கள் வெ-ளியே காட்டப்பட வேண்டிய நிலை தோன்றும்.
தற்போது பல தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது முன் வைக்கப்படும் "மதுபான நிலைய லைசன்ஸ்" விவகாரம் என்பது சுமார் 60 வருடங்களுக்கு முன்னரே எமது அன்றைய அரசியல்வாதிகளால் கையாளப்பட்ட விடயமா-கும். அவர்கள் தங்கள் உறவினர்களுக்கும் பணம் தரக்கூடிய நண்பர்களுக்கும் அ்வவாறான லைசன்களைப் பெற்றுக் கொடுத்தார்கள். அந்த வியாபாரங்கள் தற்போது பரம்பரைபரம்பரையாகத் தொடர்கின்றன.
இதே போன்று அண்மையில் இலங்கைக்கான புதிய கனடியத் தூதுவரை தம்மிச்சையாகச் சந்தித்த சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்கள் தற்கால அரசியலில் பல குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களாக அறியப்பட்டவர்கள். ஆனால் அவர்கள் "ஆடாமலும் அசையாமலும்" தங்கள் காய்களை நகர்த்திச் செல்லமுயலுகின்றார்கள். இவ்வாறானவர்களையும் இன்னும் இவர்கள் போன்ற இன்னும் சிலரையும் வடக்கு கிழக்கு அரசியலிருந்து ஒதுங்கிக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்வது நியாயத்தைத் தேடும் ஊடகங்களினதும் தனி நபர்களினதும் முக்கிய பணி என்பதை நாம் இந்த இடத்தில் குறிப்பிட விரும்புகின்றோம்!

### பெண் பராமரிப்பாளர் தேவை

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீட்டிற்கு திரும்பியிருக்கும் வயதான அம்மாவை வீட்டிற்கு வந்து பராமரித்துக் கொள்ளக்கூடிய பெண் உதவியாளர் தேவை. தொடர்பு: பாலா மாஸ்டர் 416-418-8425

### மணமகன் தேவை

கனடாவில் நிரந்தர குடியுரிமை உள்ள, அரசாங்கத்தில் பணி புரியும் இந்து மத மணப்பெண்ணுக்கு படித்த, குணமுள்ள மணமகன் தேவை. தொடர்பு: 647-533-6564 647-859-4888

### PART TIME CLEANING JOB

**Part-time cleaning job available in Oakville for 2 people. Morning and midnight shifts. Permanent resident or citizen person. For more details, call 647-286-2340**

### HELP WANTED

**Workers needed for renovation company. Must have experience in one of the following:**

- **Drywall Installation**
- **Painting**
- **Hardwood Installation**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**

**Call - Siva 416-706-8160**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் அபாயகரமான ஒன்றைக் கொண்டுவரவே அநுரவின் அரசு ஆயத்தமாகிறது என்கிறார் தமிழரசின் செயலாளர் சுமந்திரன்






பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்காக மக்கள் ஆணை பெற்ற ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கம் புதிதாக வரைபு செய்துள்ள "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்துக்கு" வடக்கின் மிகப்பிரதானமான தமிழ் அரசியல் கட்சி தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (ITAK) செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தை விடவும் அபாயகரமான ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கே தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஆயத்தமாகி வருவதாக யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் குற்றம் சுமத்துகிறார்.

"பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதாகக் கூறி சட்டமூலம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதே அவர்கள் அளித்த வாக்குறுதியாகும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான சட்டங்களைக் கொண்டுவருவதாகக் கூறி, அதை விடவும் அபாயகரமான ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சிப்பதை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது."

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு பதிலாக இதற்கு முன்னர் வரைவு செய்யப்பட்ட இரண்டு சட்டமூலங்களுக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான கட்சியான மக்கள் விடுதலை முன்னணி ஆட்சியதிகாரத்தைப் பெறுவதற்கு முன்னர் எவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்தது என்பதையும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நினைவுபடுத்தினார்.

"இது தொடர்பாக இதற்கு முன்னதாக இரு தடவைகள் இரண்டு சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அச்சட்டமூலங்கள் கொண்டுவரப்பட்ட போதெல்லாம், ஜேவிபி கட்சியினர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் எனவும், அதற்கு பதிலாக வேறு சட்டங்களைக் கொண்டுவர வேண்டாம் எனவும் எங்களை விடவும் மேலாக நின்றவர்கள். எங்களை விடவும் மேலாக என்று சொல்லக் காரணம் - நாங்களும் அதே நிலைப்பாட்டிலேயே இருந்தோம் - ஆனால் கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்ட விடயங்கள் தொடர்பிலான கலந்துரையாடல்களில் நாங்கள் கலந்துகொண்டோம். அவர்கள் அந்தக் கலந்துரையாடல்களுக்குக் கூட வரவில்லை. வேறு ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது தவறு என்ற ஒரே நிலைப்பாட்டில் அவர்கள் இருந்தமையே அதற்குப் பின்னணியில் இருந்த காரணமாகும்."

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குமாறு வலியுறுத்தி நாட்டின் 25 மாவட்டங்களிலும் தமது கட்சியினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தம்முடன் கைகோர்த்த மக்கள் விடுதலை முன்னணியானது அன்றைய நிலைப்பாட்டை தற்போது முற்றிலும் தலைகீழாக மாற்றியுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் குற்றம் சுமத்தினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி (ITAK) மற்றும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி (DTNA) ஆகியன மாதாந்தம் நடத்தும் அரசியல் கலந்துரையாடலின் பின்னர் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் ஈ.பி.ஆர்.எல்.எ·.ப் (EPRLF) ஊடகப் பேச்சாளருமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் இணைந்து நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி நாம் 25 மாவட்டங்களிலும் போராட்டங்களை முன்னெடுத்த போது எம்முடன் கைகோர்த்து நின்றவர்கள். பல சந்தர்ப்பங்களில் அந்த நிலைப்பாட்டைத் தெளிவாக பகிரங்கமாகவே கூறியவர்கள். இன்று அதனைத் தலைகீழாக மாற்றி இன்னுமொரு சட்டமூலத்தைக் கொண்டுவந்துள்ளார்கள்."

அந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அரசாங்கத்துக்கு திட்டவட்டமாக வலியுறுத்திய விடயமாவது பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பதும் அதற்காக எவ்விதத்திலும் மாற்றீடான ஒரு சட்டம் அவசியமில்லை என்பதும் ஆகும்.

"அதில் உள்ள சில விடயங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் அபாயகரமானவை. இருப்பினும் அந்த விடயங்கள் குறித்துப் பேசுவதற்கு முன்னதாக, பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பதும், அதற்குப் பதிலாக எந்தவொரு சட்டத்தையும் கொண்டு வர வேண்டாம் என்பதுமான எமது நிலைப்பாட்டை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறோம்."

இலங்கைத் தமிழரசுக் கட்சி (ITAK) மற்றும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி (DTNA) ஆகியன 2026 ஜனவரி 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்திய அரசியல் கலந்துரையாடலின்போது தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஆவணப்படுத்துவதற்குத் தீர்மானித்திருந்தன.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கத்தினால் புதிதாக வரைவு செய்யப்பட்டு, http://moj.gov.lk என்ற இணையதளத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ள "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்" தொடர்பில் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை பொதுமக்கள் தமது கருத்துகளை முன்வைக்க முடியும் எனத் தெரிவித்துள்ள நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நானயக்கார, அவற்றை மிக உன்னிப்பாக அவதானித்து அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நாட்டின் பிரஜைகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

"எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை மக்களின் கருத்துகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும், இதில் மேலும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமாயின் அவை எவை என்பது குறித்த கருத்துகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இந்தக் காலப்பகுதி திறக்கப்பட்டுள்ளது என நான் பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். புதிய கருத்துக்களை வழங்கி, இவற்றை மிக உன்னிப்பாக அவதானித்து அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்."

90 பக்கங்களைக் கொண்ட அந்தச் சட்டமூலம் தொடர்பில் பொதுமக்கள் கருத்து தெரிவிப்பதற்காக ஆரம்பத்தில் ஒரு மாத காலம் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், சமூக வலைத்தளங்களில் எழுந்த எதிர்ப்பை அடுத்து அக்காலப்பகுதி நீடிக்கப்பட்டுள்ளது.

இது ஓர் இறுதியான சட்டம் அல்லவென்றும், மக்களின் கருத்துக்கள் மற்றும் திருத்தங்களுக்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு சட்டமூலமாகவே மக்கள் முன் வைக்கப்பட்டுள்ளது என்றும் ஒரு காணொளி ஊடாக அமைச்சர் மேலும் வலியுறுத்தினார்.

# கிராம மட்ட அபிவிருத்தியில் பழ மரக்கன்றுகளை நாட்டும் திட்டம் மயிலிட்டியில் ஆரம்பம்



கிராம மட்ட அபிவிருத்தியில் பழ மரக்கன்றுகளை நாட்டும் திட்டம் மயிலிட்டியில் 20-01-2026 புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் ஒரு அங்கமாக மயிலிட்டி தையிட்டியைச் சேர்ந்த தாய்மார்கழகப் பயனாளிகளுக்கு இப் பழமரக்கன்றுகள் அவர்களது வீடுகளுக்குச் சென்று நாட்டப்பட்டது. குறித்த நிகழ்வானது வைபவ ரீதியாக மயிலிட்டி குடும்பநல உத்தியோகத்தர் காரியாலயத்தில் இடம்பெற்றது இந் நிகழ்வில் கிராம உத்தயோகத்தர்கள் யாழ் பல்களைக்கழக சமுதாய மற்றறும் குடும்ப மருத்துவத்துறையினர் சமூக மட்ட அமைப்புக்கள் ரீச்சாவின் விவசாய வல்லுணர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் வீடுகளுக்குச் சென்று பழ மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. குறிப்பாக பெருமளவில் தொடர்ச்சித் தன்மையான வருமானம் ஈட்டத்தக்கதான மாதுளைஇகொய்யாஇமா போன்ற பழ மரங்கள் நாட்டபபட்டன விசேடமாக 15 பயனாளிகளுக்கு 200 இற்கும் அதிகமான கன்றுகள் நாட்டப்பட்டமை குறிப் பிடத்தக்கதாகும். தெரிவு செய்யப்பட் பயனாளிகளுக்கு ரீச்சா ஒன்றினைந்த பண்ணையில் ஒரு நாள் செய்முறையுடன் கூடிய முழுநாள் பயிற்சி வழங்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இவ் கிரமமமட்ட அபிவிருத் தித்திட்டத்தில் பல அமைப்புக்கள் கைசேர்த்து கிராமத்தை கட்டியெழுப்புதல் சிறப்பிற்குரியதாகும் அந்த வகையில் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியின் ஆதரவுடனும் அனைத்துலக மருத்துவ நல அமைப்பினரின் சமூக மட்ட அமைப்புக்ககளை ஒன்றிணைத்தலுடனும் பேராசிரியர் சிவானந்தன் ஆய்வுகூடம் (ஐக்கிய அமரிக்கா) அவர்களின் நிதிப் பங்களிப்புடனும் மனித நேயம் அறக் கட்டளையினரின் மக்களை ஒருங்கிணைக்கும் செயற்பாட்டுடனும் ரீச்சா ஒருங்கிணைந்த பண்ணையினரின் தொழினுட்ப ஆலோசனை மற்றும் வழிகாட்டலுடனும் இவர்களுடன் Digi path Study இணைப்பாளர்களின் உதவியுடனும் இவ் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் கைங்கரியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



சுருவில் மக்களின் நத்தார், குளிர்கால ஒன்றுகூடல்

சுருவில் மக்கள் நத்தார் ஒன்றுகூடல்
தை 31ம் திகதி 2026 சனிக்கிழமை அன்று
மாலை ஸ்காபரோ அமைந்திருக்கும்
Scarborough Event Centre
(5637 Finch Ave., Unit #1, Scarborough, ON M1B 5K9)
என்னும் இடத்தில் நடைபெறவுள்ளது.
அனைவரையும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாண மருத்துவ பீட மாணவி விதுனி பஸ்நாயக்கவின் சிங்கள மொழி கட்டுரை நூல் வெளியீட்டு விழாவை ஏற்று நடத்திய பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவி விதுனி பஸ்நாயக்க எழுதிய “உத்துரு கோண அருமசிய” (வடக்கு மூலையின் அதிசயம்) என்னும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு கடந்த 25.01.2026ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி வளாகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மருத்துவபீட மாணவர் ஒன்றியம், சமுதாய மருத்துவத்துறை, மற்றும் மாணவர் வளநிலையம் இணைத்து நடாத்திய குறித்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் இ. சுரேந்திரகுமாரன் கலந்து கொண்டார்.

அன்றைய வெளியீட்டு விழாவில் குழந்தைநல மருத்துவ நிபுணர் பேராசிரியர் கீதாஞ்சலி சத்தியதாஸ், உளநல வைத்தியநிபுணர் சி.சிவதாஸ், உளநல வைத்திய நிபுணர் ரி.கடம்பநாதன் (மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை) போன்றோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்திருந்தனர். வைத்திய நிபுணர்கள், மருத்துவர்கள், மருத்துவ ஊழியர்கள், மருத்துவ மாணவர்கள், ஊடவியலாளர்கள், நூலாசிரியருடைய உறவினர்கள் நண்பர்கள் என்று பலரும் விழாவில் கலந்து கொண்டிருந்தனர்.

நாட்டின் தென் பகுதியில் இருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகி வடக்கு நோக்கி நம்பிக்கைகளைச் சுமந்து வந்த மருத்துவ மாணவி ஒருவர், இனம், மதம், மொழி என்று வேறுபட்ட முற்றிலும் புதிய ஒரு மண்ணில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளுவதற்காக சந்தித்த சவால்களை சாதனைகளாக்கி வடமாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கும் பயணித்து எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக இந்த கட்டுரை நூல் வெளிவந்துள்ளது.

நூலை வெளியிட்டு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமாரன் “தெற்கிலிருந்து வந்த மாணவி ஒருவர் இந்த நிலத்தையும், அதன் வரலாற்று, கலாச்சார அம்சங்களையும் உள்வாங்கி வடக்குமூலையின் அதிசயம் என்கிற இந்த நூலை எழுதியிருப்பதை இட்டு தாம் பெருமை அடைவதாகவும், இத்தகைய மாற்றங்கள் வரவேற்கத்தக்கது என்றும் யாழ் மருத்துவ பீடம் அதன் மருத்துவ மாணவர்களின் இத்தகைய வளர்ச்சிப் பாதைகளுக்கு உறுதுணையாக நிற்கும்” என்றும் குறிப்பிட்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.





நிகழ்வில் நூல் தொடர்பான உரை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இடம்பெற்றன. சிங்கள மொழிமூல உரையினை



கல்வியியலாளர் சாமிநாதன் விமலும், தமிழ் மொழிமூல உரையினை சர்மிலா வினோதினி அவர்களும் ஆங்கில மொழிமூல உரையினை மருத்துவபீட சிரேஸ்ட விரிவுரையாளர் வைத்தியர் ரம்யா குமார் ஆகியோரும் நிகழ்த்தினர்.

வடக்கின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், இடங்கள், சமூக வாழ்வியல் கோலங்களை நேர் சிந்தனையோடு பதிவு செய்திருக்கின்ற தன்னுடைய புத்தகத்தை பற்றி நூலாசிரியர் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

“இந்த நூல் என்னுடைய முதலாவது படைப்பு.

இலங்கையின் வட பிராந்தியத்தில் ஆறு மறக்கமுடியாத ஆண்டுகளை கடந்து வந்த அனுபவங்களை மனதார பதிவு செய்திருக்கின்ற ஒரு உணர்வுப்பூர்வமான வரலாற்று நூலாகும்.

இந்த தனித்துவமான பிராந்தியத்தை வரையறுக்கின்ற நிலப்பரப்புகள், மக்கள், நினைவுகள் மற்றும் படிப்படியான மாற்றங்களை இது பதிவு செய்கிறது. பரபரப்பான நகரங்களிலிருந்து தொலைதூரத்தில் அமைதியை சூடி இருக்கின்ற கடற்கரை பாதைகள் வரை ஒவ்வொரு பயணமும் அன்றாட வாழ்க்கையோடு ஒன்றிப்போன பண்பாடு, வரலாறு மற்றும் நம்பிக்கைகளை பிரதிபலிக்கிறது.

இது ஒரு பயணக் கதை மட்டுமல்ல, மாறாக என்னுடைய பார்வைகளை மாற்றிய சந்திப்புகள், ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய சமூகங்கள், மற்றும் வடக்கின் ஆன்மாவை வெளிப்படுத்தும் தருணங்களைப் பிரதிபலிக்கும் தனிப்பட்ட சிந்தனைகளின் தொகுப்பாகும். ஆறு ஆண்டுகளாக சேகரிக்கப்பட்ட அனுபவங்கள், பார்வைகள் மற்றும் உணர்வுகள் மூலம் வாசகர்கள் எழுத்தாளருடன் இணைந்து பயணம் செய்து வடக்கு தீபகற்பத்தை மறுபடியும் கண்டறிய அழைக்கப்படுகிறார்கள்.

இது ஒரு நிலத்திற்கும் அதன் மக்களுக்கும் செலுத்தப்படுகின்ற மரியாதை மிக்க நெருக்கமான பதிவாகும்”.

***நன்றி: சர்மிலா வினோதினி - தங்கள் முகநூற் பதிவிற்கு***



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "இரண்டு "அறியப்பட்ட" அரசியல்வாதிகள்" இலங்கைக்கான கனடியத்தூதுவர் Isabelle Martin, அம்மையாரை எதற்காகச் சந்தித்தார்கள்?

இலங்கைக்கான கனடியத்தூதுவர் Isabelle Martin, அம்மையார் அவர்கள் புதிதாகப் பதவியேற்றவர். அவரை அண்மையில் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட எமது பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்கள் சந்தித்து பல விடயங்கள் தொடர்பாக உரையாடினார். அவரது அந்த விஜயம் பிற நன்மை தரும் விடயங்களைக் கொண்டதாக விளங்கியது. பல மனித நேயப்ப் பணிகள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட சந்திப்புக்கள் ஆகியவற்றை மேற்கொண்டு அவர் திருப்தியுடன் கனடா திரும்பியுள்ளார். யுனிற்றா நாதன் எம்.பி அவர்களின் நற்பணி இங்கும் தொடர்கின்றது.

அது ஒரு புறம் இருக்க. இங்கு காணப்படும் படத்தில் உள்ள இரண்டு "அறியப்பட்ட" அரசியல்வாதிகள் வேறு 3 நபர்களுடன் சேர்ந்து சில நாட்களுக்கு முன்னர் கனடியத்தூதுவர் Isabelle Martin, அம்மையார்ட அவர்களைச் சந்தித்துள்ளார்கள்.

இந்தக் குழுவில் அடங்கியுள்ள இரண்டு "அறியப்பட்ட" அரசியல்வாதிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள். அத்துடன் தற்போது பாராளுமன்ற உறுப்பினராகவுள்ள அரசியல்வாதியோ மக்கள் பணியிலும் பார்க்க தனது சொந்தப் பணிகளிலேயே அதிக நேரத்தைச் செலவு செய்து நீதி மன்றம் வரையும் கொண்டு செல்லப்பட்டவர். அத்துடன் அவர் சார்ந்துள்ள கட்சியின் மத்திய குழுவானது அவரைப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யும் வண்ணம் பல தடவைகள் கேட்டுக் கொண்டுள்ளது.

மற்ற பதவி "இல்லாத" அரசியல்வாதியும் சாதாரணமானவர் அல்ல. அவரும் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற காலத்தில் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்ட "சில சலுகைளை" தற்பொழுதும் அனுபவிப்பவர். அதை விட அவரால் தமிழ் மக்களுக்கு ஒன்றையும் "புடுங்க" முடியாது என்பதும் மக்களுக்குத் தெரியும். அத்துடன் அவரது குடும்பமும் கனடாவில் தான் உள்ளது. அப்படியானால் இந்த சந்திப்பின் மூலம் அந்த இரண்டு "அறியப்பட்ட" அரசியல்வாதிகளும் "எதையாவது" கனடியத்தூதுவர் Isabelle Martin, அம்மையார் அவர்களிடமிருந்து பெற்றுவிட ஆசைப்பட்டிருப்பார்கள். மற்றைய மூவருக்கும் கனடியத்தூதுவர் Isabelle Martin, அம்மையாரைச் சநதித்தோம் என்ற "திருப்தி கிடைத்திருக்கலாம். மேற்படி சந்திப்பில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள், எதிர்கால அரசியல் நகர்வுகள் உள்ளிட்ட முக்கியமான பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன என்று ஊடகங்களுக்கு இந்த "அறியப்பட்ட "அரசியல்வாதிகள்" எழுதிக் கொடுத்திருக்கலாம். ஆமாம் "இவர்கள் இருவரும்" எதிர்நோக்கும் பிரச்சனைகள், எதிர்கால அரசியல் நகர்வுகள்" என்று அந்த செய்திக்கு அனுபவமிக்க ஊடகவியலாளர்கள் தலைப்பு இடவேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் விரும்புகின்றார்கள்!



கனடிய செய்திகள்
Canadian News

# "ஒன்றாரியோவில் உள்ள பல்லின ஊடகங்களின் பலத்தையும் அரசுகளுக்கான அவற்றின் தேவைகள் பற்றியும் கனடிய பிரதமருக்கு எடுத்துச் சொல்வேன்"

## பல்லின ஊடகங்களின் முக்கியஸ்த்தர்களுடன் நடத்திய வட்ட மேசை சந்திப்பில் ஒன்றாரியோ மாகாண எதிர்க்கட்சித் தலைவி Marit Stiles உறுதி





"ஒன்றாரியோ மாகாணத்திலும் மற்றும் பிற மாகாணங்களிலும் இயங்கிவரும் உள்ள பல்லின ஊடகங்கள் தற்போது மிகுந்த நிதி நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளதை அரசியல்வாதிகளான நாம் நன்கு அறிவோம். அதேவேளை அவற்றின் பலம் பற்றியும் மேற்படி பல்லின ஊடகங்களினால் அரசாங்கத்திற்கும் அரசியல்வாதிகளுக்கும் மற்றும் வர்த்தகர்களுக்கும் வாசகர்களுக்கும் உள்ள பலன்கள் பற்றியும் நாம் அறிவோம். இவ்வாறான நிலையில் அண்மையில் எமது கனடியப் பிரதமர் சுவிற்சலாந்தில் உலக பொருளாதார மாநாட்டில் ஆற்றிய உரையை முக்கியத்துவம் கொடுத்து தங்கள் முன்பக்கத்தில் பல பல்லின ஊடகங்கள் பிரசுரித்தும் ஒளிபரப்புச் செய்தும் உள்ளதை நான் இன்று நேரடியாகக் காண்கின்றேன். அவற்றுள் கனடா உதயன் வாரப் பத்திரிகையும் ஒன்று என்பதை காண்கின்றேன். எனவே எமது பல்லின பத்திரிகைகளின் பலத்தையும் அரசுகளுக்கான அவற்றின் தேவைகள் பற்றியும் கனடிய பிரதமருக்கு எடுத்துச் சொல்வேன்".





இவ்வாறு 28ம் திகதி புதன்கிழமையன்று மாலைர ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றமான "குயின்ஸ்பார்க்" இல் உள்ள கருத்தரங்கு அறையில் அவர்ட நடத்திய பல்லின ஊடகங்களின் முக்கியஸ்த்தர்களுடனான வட்ட மேசை சந்திப்பில் ஒன்றாரியோ மாகாண எதிர்க்கட்சித் தலைவி ஆயசவை ளுவடைநள உறுதியளித்தார்.

மேற்படி ஊடகச் சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவியும் Davenport தொகுதியின் எம்பியும் ஆகிய கௌரவ ஆயசவை ளுவடைநள அவர்கள் தெரிவித்தார்.

அவருடன் Alex Gilmour - Parkdale-HighPark மற்றும் Tom Rakocevic - Humber River - Black Greek ஆகிய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்து பல்லின ஊடகங்களின் பிரதம ஆசிரியர்களையும் அதன் நிர்வாகிகளையும் பாராட்டி உங்கள் பணிகளை தொடருங்கள். உங்களுக்கு நாம் என்றும் ஆதரவாக இருப்போம், என்று உறுதியளித்தார்கள்.

மேற்படி ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கனடா உதயன் பிரதம ஆசிரியர் மற்றும் ரிவிஷன் தமிழ் ஆங்கில இணையத்தளத்தின் சார்பில் ரவி அச்சுதன் மற்றும் ஷார்லினி பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

*- Uthayan LJI Journalist Arjune -*


TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

கனடிய செய்திகள் Canadian News

# கனடிய அரசின் உயர்மட்ட அமைச்சர்களும் இலங்கை மற்றும் இந்திய தமிழ்க் குடும்பங்களின் வம்சாவழிகளுமான இருவர் கலந்து சிறப்பித்த ஆளும் கட்சியின் வருடாந்த பொங்கல்விழா




வருடா வருடம் தவறாது நடைபெறும் பொங்கல் விழா மற்றும் தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம் ஆகியவற்றை கனடாவின் ஆளும் கட்சிக் குழு நடத்துவது முக்கிய நிகழ்வாக அமையும்.

அந்தவகையில், கனடிய அரசின் உயர்மட்ட அமைச்சர்களும் இலங்கை மற்றும் இந்திய தமிழ்க் குடும்பங்களின் வம்சாவழிகளுமான முறையே. கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டு அமைச்சு ஆகியவற்றின் அமைச்சர்சகளான ஹரி ஆனந்தசங்கரி மற்றும் அனிற்றா ஆனந் அத்துடன் மற்றுமொரு தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா ஆனந் ஆகியோரும் பத்துக்கு மேற்பட்ட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்த ஆளும் கட்சியின் வருடாந்த பொங்கல்விழா ஒட்டாவா மாநகரில் 27-01-2026 அன்று செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்றது.

மேற்படி விழாவிற்கு அழைக்கப்பெற்றவர்களாக மொன்றியால் - ஒட்டாவா - ரொறன்ரோ - கோன்வொல் ஆகிய நகர் வாழ் தமிழ் மக்களும் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

கலை நிகழ்ச்சிகளும் அத்துடன் முக்கிய நிகழ்வாக எமது தாயகத்திலிருந்து தற்பொழுது கனடாவில் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றவர்களான ராப் பாடகர் வாகீசன் மற்றும் அட்விக் - கிசோன் ஆகியோர் வழங்கிய பாடல் நிகழ்ச்சியும் சபையோரைக் கவர்ந்தன.

மேற்படி நிகழ்வில் கனடா உதயன் பத்திரிகை சார்பாக நண்பர்கள் குழு, அதன் பிரதம ஆசிரியரோடு சென்றிருந்தது.

இந்த நிகழ்வானது தமிழர் பண்பாட்டையும் மொழியின் முக்கியத்துவத்தையும் பறைசாற்று கின்ற ஒரு முக்கிய நிகழ்வாக அனைவரையும் பெருமை கொள்ளச் செய்தது. என்றால் அது மிகையாகாது.

"பெருமை கொள் தமிழா!"

***படங்களும்: சத்தியன்***

***- UTHAYAN LJI Journalist Ganesh -***









# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# முருகனாகிறார் அனுர?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**த**மிழ் ரப் பாடகர் வாகீசனைத் தூக்கியது அவருடைய முருகன் பாடல். அப்பாடலில் முருகன் ஒரு கடவுளாக மட்டும் சித்தரிக்கப் படவில்லை. அவர் தமிழ் மக்களைக் காக்கும் ஒரு தலைவராகவும் வர்ணிக்கப்படுகிறார். அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரை மறைமுகமாக அது சுட்டுகிறது என்று பொதுவான விளங்கிக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு, தனது முருகன் பாடலுக்குள் உட்பொதிந்துள்ள அரசியலுக்கு ஊடாகவும் கொண்டாடப்படுகின்ற ஒரு ரப் பாடகரைக் கொண்ட அதே சமூகத்தில்தான், அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட உறுப்பினர் ஒருவர் அனுரவை முருகனோடு ஒப்பிட்டு முகநூலில் எழுதியிருந்தார்.

அனுரவை தோழராக, சகோதரராக, ஏழைகளுக்கு இனியவராக, செல்∴பி நாயகனாக... இன்னபிறவாக சித்திரித்த அரசியல் விசுவாசம், அதன் அடுத்த கட்டமாக அவரை கடவுளுக்கு நிகராகச் சித்தரிக்கும் ஒரு வளர்ச்சிக்கு வந்திருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் தமிழ் உறுப்பினர்களில் ஒருவர் அவ்வாறு வர்ணித்துள்ளார்.

தானக்கு விருப்பமான ஒரு தலைமையை கடவுள் நிலைக்கு உயர்த்துவதும் உயர்த்தாமல் விடுவதும் அந்தத் தொண்டருடைய பக்தியின் அளவைப் பொறுத்தது. ஆனால் இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், ஒரு சிங்களத் தலைவரை அவருடைய தமிழ்த் தொண்டர் ஒருவர் இவ்வாறு தெய்வ நிலைக்கு உயர்த்துவது என்பது இதற்கு முன் காணப்பட்டிராத ஒன்று.

சிங்களத் தலைவர்களைப் போற்றும் தமிழ்த் தொண்டர்கள் இதற்கு முன்னரும் இருந்திருக்கிறார்கள். ஆனால் அப்பொழுது டிஜிட்டல் புரோமோஷன் என்பது இருக்கவில்லை. தவிர யுத்த காலங்களில் இன முரண்பாடு கூர்மையாக இருக்கும்போது, அங்கே சிங்களத் தலைவர்களை பகிரங்கமாகப் போற்ற தமிழர்கள் துணியமாட்டார்கள். இப்பொழுது ஆயுத மோதல்கள் இல்லாத ஓர் அரசியல் சூழலில், அனுர அரைக்காற் சட்டையோடு நடக்கிறார். பாதுகாப்பு வேலிகளைத் தாண்டி வந்து செல்பி எடுக்கிறார். தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கைகளை நீட்டி அவரை அழைக்கிறார்கள். மூதாட்டிகளும் சிறுவர்களும் நெருங்கிச் சென்று அணைக்கிறார்கள். இந்தக் காட்சிகளை அரசாங்கத்தின் டிஜிட்டல் புரோமோஷன் அணி கவர்ச்சியான காணொளிகளாக சந்தையில் விற்கிறது.

அனுர எங்கே நாயகனாகிறார்? அல்லது நாயகன் ஆக்கப்படுகிறார்?

அவருடைய எளிமை,உடல் மொழி போன்றன அவரை விளம்பரப்படுத்த வசதியாக உள்ளன. இதற்கு முன்னிருந்த சிங்களத் தலைவர்கள் பாதுகாப்பு வேலிகளைத் தாண்டி வர முடியாதவர்கள். தமிழ் மக்கள் அவர்களை நெருங்கி அணைக்க முயற்சிக்கவில்லை மட்டுமல்ல, அவ்வாறு அணைக்க வரும் தமிழர் ஒரு மனிதக் குண்டாக இருக்கலாம் என்று அச்சப்படும் அரசியல் பல தசாப்த காலமாக இருந்தது.

அனுர அந்தப் பயமின்றி தமிழ் மக்களை நெருங்கக்கூடிய அரசியல் சூழல் இப்பொழுது உண்டு. தவிர அவருடைய கட்சிக்காரர்கள் தமிழ் மக்களை அவரை நோக்கிக் கொண்டு செல்கிறார்கள். அரசாங்கத்தின் டிஜிட்டல் புரோமோஷன் அணி அதைக் காணொளிகள் ஆக்கி, வைரல் ஆக்குகிறது. இது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய தெளிவான ஒரு பிரச்சார நிகழ்ச்சி நிரல். பலாலியில் அவர் அரைக்காற் சட்டையோடு நடந்தபோதும், வடமராட்சியில் ஒரு வயோதிபப் பெண் அவரை அணைத்தபோதும், பாதுகாப்பு வேலிகளைத் தாண்டி தமிழ் மக்கள் தங்கள் பிள்ளைகளை அவரிடம் கொடுத்து செல்∴பி எடுக்கும்போதும், அரசாங்கத்தின் டிஜிட்டல் புரமோஷன் அணி அதைக் கவர்ச்சியான பிரச்சாரப் பண்டமாக மாற்றுகிறது. இது திட்டமிட்டுச் செய்யப்படுகிறது. அதாவது தமிழ் மக்கள் மத்தியில் அனுரவை ஒரு நாயகனாகக் கட்டியெழுப்புவது என்பது திட்டமிட்டுச் செய்யப்படுகின்ற, காசு கொடுத்துச் செய்யப்படுகின்ற ஒரு பிரச்சார உத்தி. அதுதான் உண்மை. ஆனால் அவ்வாறு அனுரவை ஒரு நாயகனாகக் கட்டியெழுப்பும் அளவுக்கு தமிழ்த்தேசியப் பரப்பில் ஒரு வெற்றிடம் நிலவுகிறது என்பதும் அதே அளவு உண்மை.

அனுரவைப் போல தமிழ்ப் படப் பாடல்களின் பின்னணியில் நாயக நடை போட தமிழ் மக்கள் மத்தியில் தலைவர்கள் அல்லது செயல்பாட்டாளர்கள் இல்லையா? அல்லது இருப்பவர்களைக் கொண்டாட இந்தச் சமூகம் தயாரில்லையா? இப்பொழுது அரங்கில் காணப்படும் தமிழ் ஆளுமைகளில் யாரையுமே அவ்வாறு கொண்டாட முடியாத ஒரு நிலைமை ஏன் தோன்றியது?

தமிழ்த் தேசிய அரசியலானது ஒருவர் மற்றவரை வில்லன் ஆக்கிக் கொண்டிருக்க, துரோகி ஆக்கிக்கொண்டிருக்க, யாருமே கதாநாயகராக கதாநாயகியாக மினுங்க முடியவில்லை.

ஒருவர் மற்றவரை ஏற்றுக்கொள்ளாத, சந்தேகிக்கின்ற, குற்றச்சாட்டுகின்ற, ஓர் அரசியல் சூழலில், யாரும் யாரையும் அங்கீகரிக்கத் தயாரில்லை. அரசியல் தலைவர்களாக இருந்தாலும் சரி, சமூகத் தலைவர்களாக இருந்தாலும் சரி, சமயத் தலைவர்களாக இருந்தாலும் சரி, யாரும் புகழோடு இருக்க முடியாது. சமூகத்தில் யாரெல்லாம் துருத்திக்கொண்டு, மினுங்கிக்கொண்டு மேல் எழுகிறார்களோ, அவர்கள் எல்லோரின் மீதும் விமர்சனங்கள்˙ அவதூறுகள்.

கடந்த 16 ஆண்டுகளில் தமிழ் மக்கள் மத்தியில் எந்த ஓர் உள்ளூர் தலைவரும் சரி,மாவட்ட மட்டத் தலைவரும் சரி, தேசியமட்டத் தலைவரும் சரி தொடர்ச்சியாக ஜனவசியத்தைத் தக்க வைத்துக்கொள்ள முடியாமல் போனது ஏன்?

தமிழ் மக்கள் யார் சொன்னால் கேட்பார்கள்? யாரை வாழும் முன்னுதாரணமாகப் பார்க்கிறார்கள்? யாருமே வாழும் முன்னுதாரணமாக இல்லாத ஒரு சமூகமா இது? தியாகிகளைப் போற்றும் ஒரு சமூகத்தில் உயிருள்ள வாழும் முன்மாதிரிகள் ஒருவரும் இல்லையா?

ஒருவர் மற்றவரை சந்தேகிக்கின்ற, அல்லது அங்கீகரிக்காத ஒரு நிலைமை என்பது ஒரு சமூகத்தின் கூட்டுணர்வை, கூட்டுச் செயற்பாட்டைப் பாதிக்கும். இது கட்சிகளில் தொடங்கி, சமூக நிறுவனங்கள், ஆலய அறக் கட்டளைகள், திருச்சபைகள், பழைய மாணவ சங்கங்கள்... என்றிவ்வாறாக முழுச் சமூகத்துக்குமான ஒரு பொது வியாதியாக மாறி வருகிறது.

சமூக வலைத்தளங்களுக்கு முற்பட்ட காலத்தில் மொட்டைக் கடிதம் இருந்தது. மல முட்டி இருந்தது. இப்பொழுது இரண்டும் இணைந்து பேக் ஐடிகளாக, முகம் காட்டா முகநூல் கணக்குகளாக மாறிவிட்டன. மல முட்டி என்பது, தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரசும் இரு துருவங்களாக இருந்த காலகட்டத்தில் இருந்த ஒரு தோற்றப்பாடு. தமது கட்சி எதிரியைத் தாக்குவதற்கு, அசிங்கப்படுத்துவதற்கு மண்பானையில் மலத்தைச் சேகரித்துக் கொண்டுவந்து அரசியல் எதிரியின் வீட்டின் முற்றத்தில் அல்லது வாசலில் பானையை உடைத்து விடுவார்கள்.

ஆயுதப் போராட்டத்திற்கு முன்னர் காணப்பட்ட இந்த மல முட்டி அரசியல் மொட்டைக் கடிதத்தோடு இணைந்து முழுச்சமூகமும் நாறும் ஒரு நிலைமை வளர்ந்து வருகிறது. ஒரே கட்சிக்குள்ளேயே இரண்டு அணிகள் ஒன்று மற்றதன் மீது மலத்தை வாரி வீசும் போது இரண்டுமே நாறுகின்றன. அண்மையில் மட்டக்களப்பில் சுமந்திரன் அவ்வாறான முகம் காட்டா முகநூல் பக்கங்களைக் குறித்துப் பேசியிருக்கிறார்.

முகம் காட்டா முகநூல் பக்கங்கள், தொண்டர்களை ஏவி வழக்குத் தொடுக்கும் தலைவர்கள், தனது கட்சிக்காரனை அல்லது தன்னை விமர்சிப்பவரை மடக்குவதற்கு வழக்கு போடுவேன் என்று மிரட்டும் அரசியல்வாதிகள், தன் கட்சிக்காரனுக்கு எதிராக தென்னிலங்கை மையக் கட்சி ஒன்றின் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரை நாடாளுமன்றத்தில் பேச வைக்கும் தமிழ் அரசியல் வாதிகள், சமூகத்தில் யாராவது மினுங்கிக் கொண்டு மேலெழுந்தால் அவர்களைக் காலால் மிதித்துச் சப்பையாக்கிவிடக் காத்திருக்கும் சமூக வலைத்தள நீதிபதிகள்... என்று இவ்வாறாக தமிழ்ச் சமூகம் அதன் மாண்பை இழந்து கொண்டு போகிறது.

ஒருகாலம் திட்டமிட்டு வெறுப்பர்களை உற்பத்தி செய்த, வெறுப்புப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்ட, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நடவடிக்கைகளில் இப்பொழுது மாற்றம் தெரிகிறது. ஆனால் உள்ளதில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சியோ நாறிக் கொண்டிருக்கிறது.

சிங்கள நாடாளுமன்ற உறுப்பினராகிய தயாசிறீயை, சிறீதரனுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பேசவைத்தது யார் என்பது எல்லாருக்கும் தெரியும். தனது உட்கட்சி முரண்பாட்டைக் கையாள்வதற்கு இவ்வாறு தென்னிலங்கை மையக் கட்சி ஒன்றின் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரைக் கருவியாகக் கையாள்வது என்பது தமிழ்த்தேசிய அரசியல் எங்கே வந்துநிற்கிறது என்பதைக் காட்டுகிறது. அதே சமயம் சிறீதரன் அரசியலமைப்பு பேரவையில் படைப் பிரதானிகளுக்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறார் என்ற விடயம் அவரைப் பொது வெளியில் அம்பலப்படுத்த, அவமானப்படுத்தத் தேவையான வாய்ப்புகளை வழங்குகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழரசுக் கட்சிக்குள் தீர்க்கப்படாத உட்கட்சி முரண்பாடு இடக்கிடை நாடாளுமன்றத்திலும் அடிக்கடி ஊடக ஒலிவாங்கிகளுக்கு முன்னரும் அசிங்கமான விதங்களில் வெளிப்படுகிறது. கட்சியின் கூட்டுணர்வை, சகோதரத்துவத்தைக் கவனத்தில் எடுத்து உட்கட்சிப் பிரச்சனையை உட்க்கட்சிக்குள்ளேயே தீர்க்க முடியாத அளவுக்கு கட்சி பலவீனமாக உள்ளது. தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது பலமான தலைவர்கள் இல்லை என்பதுதான் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலான யதார்த்தம். சுமந்திரனாலும் கட்சியைத் தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. சிறீதரனாலும் முடியவில்லை.

யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் தனக்கென்று நிலையான வாக்கு வங்கியைக் கொண்டிருப்பவர் சிறீதரன். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்குடா நாட்டுக்குள் தமிழரசுக் கட்சிக்கு ஆசனம் கிடைக்கவில்லை. தேர்தல் தொகுதி என்ற அடிப்படையில் கிளிநொச்சியில் சிறீதரன் பெற்ற வெற்றியும் இல்லையென்றால் தமிழரசுக் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் ஆசனமே இல்லை.

எல்லாவிதமான குற்றச்சாட்டுகளுக்கும் அப்பால், கிளிநொச்சியில் இப்பொழுதும் சிறீதரனுக்கு நிலையான வாக்கு வங்கி உண்டு. யாழ்குடா நாட்டில் மட்டுமல்ல,தமிழரசு கட்சிக்குள் நிலையான வாக்கு வங்கியைக் கொண்ட ஒருவர் அவர். தமிழரசுக் கட்சிக்குள் அவரைத் தோற்கடித்தாலும், கிளிநொச்சியில் அவரைத் தோற்கடிக்கலாமா என்பதனை இனிமேல்தான் பரிசோதிக்க வேண்டும்.

ஆனால் சிறீதரனை அவமானப்படுத்தி அவருடைய மாவட்டத்துக்குள்ளேயே முடக்க இன்றுவரை சுமந்திரனால் முடியவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளிலும் கட்சிக்குள் சுமந்திரன் தன்னுடைய நிலையை ஒப்பீட்டளவில் பலப்படுத்தி வந்தாலும் வாக்காளர்கள் மத்தியில் அவர் பலமாக உள்ளாரா என்பதை இனிமேல்தான் பரிசோதிக்க வேண்டும்.

இந்த முரண்பாடுகளின் மத்தியிலும் தமிழரசுக் கட்சி பலமாக உள்ளது என்ற ஒரு தோற்றம் வெளியே தெரிகிறது. ஏன் தெரியுமா? அது வெல்லக்கூடிய கட்சி என்று அந்தக் கட்சி உறுப்பினர்கள் நம்பி அந்தக் கட்சிக்குள் ஒட்டிக் கொண்டிருப்பதுதான். நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட வடக்குக் கிழக்காக கீழ்மட்ட வலையமைப்பை கொண்ட ஒரு கட்சி அது. வெல்லக் கூடிய குதிரை என்பதால் அநேகர் கட்சிக்குள் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 75 ஆண்டுகளிலும் அந்தக் கட்சியில் வாக்காளர்களைப் பிரதிபலிக்கும் தலைவர்களும் கொழும்பை நோக்கிச் சாயும் தலைவர்களும் இருந்ததுண்டு. இந்த இரண்டு பண்புகளினதும் கலப்புத்தான் தமிழரசுக் கட்சி. இந்த இரண்டு போக்குகளும் ஒன்று மற்றதை அனுசரித்துப் போனமைதான் கட்சியின் பலம். ஆனால் இப்பொழுது இந்த இரண்டு போக்குகளும் முரண்படும் ஒரு நிலை தோன்றியிருக்கிறது. இது கட்சியை எங்கே கொண்டு போய்விடும்?

தமிழரசுக் கட்சி சிதையுமாக இருந்தால் அந்த வெற்றிடத்தை நிரப்ப தமிழ்த் தேசியப் பேரவையால் முடியுமா? அது இப்பொழுதுவரை ஒரு பிரதான நீரோட்டக் கட்சிக்குரிய பண்புகளோடு காணப்படவில்லை. மாறாக மாற்று நீரோட்டக் கட்சியாகத்தான் காணப்படுகிறது.

இவ்வாறு தமிழ் தேசிய பரப்பில் கட்சிகளுக்குள்ளும் கட்சிகளுக்கு இடையிலும் ஒருவர் மற்றவரை வில்லன் ஆக்கும் மோதல்களால், தமிழ்த் தேசியப் பரப்பில் யாருமே கதாநாயகராக எழ முடியவில்லை. அந்த வெற்றிடத்தில் அரச பலத்தோடு, அரச வளங்களைப் பிரயோகித்து அனுர நாயகனாக இறக்கப்படுகிறார். கடந்த வாரம் முருகனாகப் பதவி உயர்த்தப்பட்டிருக்கிறார். அதாவது தமிழர்கள் ஒருவர் மற்றவரை சூரன்கள் ஆக்கிக் கொண்டிருக்க முருகன்கள் வெளியில் இருந்து குதிக்கிறார்களா? விக்னேஸ்வரனுக்கும் வாகீசனுக்கும் கையில் வேல் கொடுத்த ஒரு சமூகம், விரைவில் அனுரவிக்கும் ஒரு வேலைக் கொடுத்து விடுமோ?

# யாழ்ப்பாணம் காரைநகரில் புதிதாக அமைக்கப்பெற்ற சூரிய உலர்த்தி திறப்புவிழா!





காரைநகரில் அமைந்துள்ள உள்ளூர் உற்பத்தி நிறுவனமான பல்லுயிர் நிறுவனத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சூரிய உலர்த்தியானது 29ம் தி-கதி வியாழக்கிழமை அன்றையதினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த சூரிய உலர்த்தியானது 50 வீதம் அரச நிதி பங்களிப்புடன் அமைக்கப்பட்டது.

நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. பின்னர் விருந்தினர்கள் அழைத்து செல்லப்பட்டு சூரிய உலர்த்தி திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் குறித்த நிறுவனத்தின் உற்பத்தி பகுதிகளையும், உற்பத்தி பொருட்களையும் பார்வையிட்டடனர்.

குறித்த நிறுவனமானது செயற்கை இரசாயனமற்ற இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் விவசாயிகளின் தானியங்களை கொள்வனவு செய்து அதிலிருந்து பல்வேறு விதமான உற்பத்தி பொருட்களை தயாரித்து உள்ளூர் சந்தையில் விற்பனை செய்வது மாத்திரமன்றி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறது.

இந்த நிறுவனமானது நஞ்சற்ற உற்பத்திகளை மக்களுக்கு வழங்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி வெளி மாவட்டங்களில் இருந்தும் மூலப்பொருட்களான இயற்கையாக உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களை கொள்வனவு செய்து உற்பத்தி செய்ற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கைலாயப்பிள்ளை சிவகரன், தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் தலைவர் றோஹித்த பிரசாந்த, அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் எந்திரி ரத்நாயக்க, காரைநகர் பிரதேச செயலர் ரஞ்சனா, மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி மௌலீஸ்வரன், கிராம சேவகர், பல்லுயிர் நிறுவனத்தினர் என பலரும் கலந்துகொண்டனர்.



# மன்னாரிலிருந்து தனங்கிளப்பு நோக்கிய பயணத்தின் போது கைப்பேசியில் உரையாடியபடி பேருந்தை செலுத்திய தனியார் பேருந்து சாரதி!

## அதிகார சபையினால் சேவையிலிருந்து இடைநிறுத்தம்.

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்) (28-01-2026)

பயணிகள் போக்குவரத்து சேவை விதிமுறைகளை மீறி, கைப்பேசியைப் பயன்படுத்தியவாறு பேருந்தை செலுத்திய தனியார் பேருந்து சாரதி ஒருவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், பாடசாலை மாணவர்களை ஏற்றாமல் சென்ற மற்றொரு பேருந்து சாரதி மற்றும் நடத்துனருக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 25.01.2026 அன்று காலை 9.45 மணி அளவில் மன்னாரில் இருந்து புறப்பட்ட தனியார் பேருந்தின் சாரதி, தனங்கிளப்பு வரையிலான பயணத்தின் போது, வீதிப் பாதுகாப்பு மற்றும் சேவை விதிமுறைகளை மீறி, கைப்பேசியில் உரையாடியவாறு பேருந்தை செலுத்தியமை தொடர்பில் காணொளி ஆதாரங்களுடன் முறைப்பாடு கிடைக்க பெற்றிருந்தது.

இம் முறைப்பாடு தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் அடிப்படையில், குறித்த பேருந்து சாரதி மறு அறிவித்தல் வரும் வரை பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று, கடந்த 23.01.2026 அன்று மதியம் 1.40 மணி அளவில், மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்களை ஏற்றாமல் சென்ற தனியார் பேருந்து தொடர்பாக, பாடசாலை நிர்வாகத்தால் அதிகார சபைக்கு எழுத்து மூலம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கமைவாக, தொடர்புடைய பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர் ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டதுடன், அவர்களுக்கு உத்தியோகபூர்வமான கடும் எச்சரிக்கையும் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துச் சேவைகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், இவ்வாறான விதி மீறல்கள் தொடர்பில் பொதுமக்கள் ஆதாரங்களுடன் முறைப்பாடுகளை முன்வைக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக தயங்காமல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

# டித்வா புயல் பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்க அரசாங்கம் போதிய நிதியை ஒதுக்கியுள்ளது என்கிறார் வடக்கின் ஆளுநர்!



டித்வா புயல் இடர்பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்டு, பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் போதிய நிதியை ஒதுக்கியுள்ளதுடன், அப்பணிகளை மிகச் சிறப்பாகக் கையாண்டு வருகின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் 2026ஆம் ஆண்டுக்கான முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 27ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை (27.01.2026) முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.
இக்கூட்டத்தில் இணைத்தலைவராக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:
2026ஆம் ஆண்டு வடக்கை பொறுத்தவரையில் ஒரு "அபிவிருத்தி ஆண்டாக" அமையவுள்ளது. முன்னெப்போதும் இல்லாத வகையில் இவ்வாண்டு அதிகளவான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மாகாண சபையின் வழமையான நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக, மத்திய நிரல் அமைச்சுக்கள் ஊடாகவும் எமக்குக் கூடுதலான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறவுள்ளன. ஒதுக்கப்பட்ட நிதிகளை விட, மேலதிகத் திட்டங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் மேலும் நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும், என்றார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கூட்டுறவுத்துறை கௌரவ பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையுரையாற்றுகையில், மத்திய மற்றும் மாகாண நிதிகளுக்கு மேலதிகமாக, இவ்வாண்டு விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடக்கு மாகாணத்தில், குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பல புதிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன, எனக் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன் வரவேற்புரையாற்றுகையில், 2025 இறுதியில் ஏற்பட்ட டித்வா பேரிடர் நிவாரணப் பணிகளுக்குச் சிறப்பான அரசியல் தலைமைத்துவமும், அதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிடைத்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் உரிய காலத்தில் வழங்கப்பட்டன. 2026இல் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், மாவட்டத்தில் நிலவும் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும், என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

இக்கூட்டத்தில், வடக்கு மாகாண சபைக்கு 2026ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற மொத்த நிதியில் 20 சதவீதம், அதாவது 1,592 மில்லியன் ரூபா முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
தொடர்ந்து, 2025ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன், 2026ஆம் ஆண்டுக்கான புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான அனுமதியும் பெறப்பட்டது. பிரதேச செயலக மட்டத்தில் தீர்க்கப்பட முடியாத விடயங்கள் மற்றும் மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ து.ரவிகரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# "எமது "அனைத்துலக தமிழர் பேரவை" அமைப்பின் செயற்பாடுகளில் தாயகத்தில் வடக்கு. கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பணிகளுக்கே முக்கியத்துவம்!"



## அமைப்பின் தலைவர் கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி தனது உரையில் தெரிவிப்பு!

-----------------------------------------------------------



# "இனிமேல் எம் தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளை நாம் நம்பிப் பயனில்லை!"

## அவுஸ்த்திரேலியா வாழ் பல்கலைக் கழகப் பேராசிரியர் செல்வா செல்வநாதன் தெரிவிப்பு

-----------------------------------------------------------



# "தற்போது அநுர அரசின் திட்டமான "மண்டைதீவு கிறிக்கெட் தளம்" எதிர்காலத்தில் மிகப்பெரிய இராணுவத் தளமாகக் கூட மாறலாம்"



## ஆரம்ப "தமிழ் நெற்" இணையத்தளத்தின் நிறுவனர் ஜெயசந்திரன் கோபிநாத் அவர்களின் வெளிப்படையான பார்வை!

**24-01-2026 அன்று சனிக்கிழமை இங்கிலாந்தின் இலண்டன் மாநகரில் Grantview Banquest Hall விழா மண்டபத்தில் நடைபெற்ற அனைத்துல தமிழர் பேரவையின் "பொங்கல் விழா 2026" இல் கலை நிகழ்ச்சிகளும் கருத்துக்களின் பகிர்வும் பார்வையாளர்களுக்கு அளித்த நம்பிக்கைகள்.**

கடந்த 24-01-2026 அன்று சனிக்கிழமை இங்கிலாந்தின் இலண்டன் மாநகரில் அமைந்துள்ள Grantview Banquest Hall என்னும் விழா மண்டபத்தில் அனைத்துல தமிழர் பேரவை நடத்திய "பொங்கல் விழா 2026" அமைப்பின் தலைவர் கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவின் பிரதம விருந்தினராக அவுஸ்த்திரேலியா வாழ் பல்கலைக் கழகப் பேராசிரியர் செல்வா செல்வநாதன் அழைக்கப்பெற்றிருந்தார்.

சிறப்புப் பேச்சாளர்களாக அமெரிக்கா வாழ் சட்டவல்லுனர் மார்க்கண்டு விக்னேஸ்வரன், இலண்டன் வாழ் எழுத்தாளர் திருமதி. நவஜோதி யோகநாதன் (அமரர் எழுத்தாளர் அகஸ்தியர் அவர்களின் புதல்வி) மற்றும் எழுத்தாளர் குணா கவியழகன் மற்றும் கனடா உதயன் பிரதம ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் உட்பட சிலர் அழைக்கப்பெற்றிருந்தனர்.

இலண்டன் மாநகரில் இயங்கிவரும் இசை நடனக் கல்லூரிகளின் மாணவ மாணவிகள் வழங்கிய கர்நாடக இசை பாடல்கள் மற்றும் அர்த்தமுள்ள பரத நாட்டிய நிகழ்வுகள் ஆகியன பொங்கல் விழாவிற்கு மெருகூட்டின. அத்துடன் இலண்டன் வாழ் மெல்லிசைப் பாடக பாடகிகள் அளித்த மெல்லிசைப் பாடல்கள் ஒவ்வொரு நிகழ்வின் இடையில் காதுக்கு இனிய கீதங்களாக ஒலித்தன.

மேலும் அங்கு உரையாற்றியவர்கள் தங்கள் உரைகளில் உள்ளடக்கிய விடயங்கள் அனைத்தும் எமது தாயக மக்களின் துயரங்களைக் களைதல் மற்றும் அங்கு ஒரு சாதகமான மாற்றம் தோன்றுவதற்கு புலம்பெயர் நாடுகளில் உள்ள அமைப்புக்களின் செயற்பாடுகளில் வெளிப்படையாகத் தோன்ற வேண்டிய மாற்றங்கள் ஆகிய விடங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பெற்றது.

அதேபோன்று அங்கு மேடையில் சமர்ப்பிக்கப்பெற்ற கலை நிகழ்ச்சிகளும் கருத்துக்களின் பகிர்வும் பார்வையாளர்களுக்கு நம்பிக்கைகள் அளித்தன என்றால் அது மிகையாகாது.







அங்கு உரையாற்றிய அமைப்பின் தலைவர் கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி தனது உரையில்: "எமது "அனைத்துலக தமிழர் பேரவை" அமைப்பின் நோக்கங்களை மக்களுக்கு அறிவிக்கும் அனைத்துலகத் தமிழர் பேரவையின்
யாப்பை இன்றைய தினம் முறையாக வெளியிடுகிறோம்.

எமது அமைப்பின் இந்த யாப்பு ஒரு சட்ட ஆவணம் மட்டும் அல்ல. அது - உலகத் தமிழர்களின ஒற்றுமையின் உறுதி. நீதி, ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகிய மதிப்புகளின் எழுத்துப்பூர்வ உறுதிமொழி. அத்துடன் உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்கள் ஒரே நோக்கில், ஒரே கட்டமைப்பில், ஒரே கனவுடன் பயணிக்க வேண்டுமென்ற அடித்தளமே இந்த யாப்பு.

மேலும் எமது கட்டுமானத்தின் வழிகாட்டி மட்டும் அல்ல் நம் தேசத்தைக் கட்டி எழுப்புவதற்கான, ஈழத் தமிழர் ஒன்றிணைவதற்கான ஒரு சாசனமுமாகும்.

உலகின் பல பகுதிகளில் இருந்து பல துறைகளில் பணியாற்றும் அறிவாளிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், தன்னார்வலர்கள், நன்கொடையாளர்கள் ஆகியோரின் விரிவான கலந்தாலோசனைகளின் விளைவாக இந்த யாப்பு உருவானது.

ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் உலகளாவிய சமூகப் பொறுப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, இது இன்றைய தேவைகளுக்கும் எதிர்கால தலைமுறைகளுக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்காக எமது அனைத்துலக தமிழர் பேரவை அமையும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

அன்றைய தினம், அனைத்துலகத் தமிழர் பேரவையின் இடைக்கால நிர்வாக சபையின் ஒப்புதலுடனும், உருவாக்கக் குழு, ஆலோசனைக் குழு, மற்றும் இந்த அமைப்பை உருவாக்க உழைத்த முதன்மைச் செயற்பாட்டாளர்களின் ஒட்டுமொத்த ஆதரவுடனும், இந்த யாப்பு முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு உலகத் தமிழர்களின் முன் அறிவிக்கப்படுகிறது. இது ஒரு யாப்பு மட்டும் அல்ல் ஈழத் தமிழர் ஒன்றிணைந்து தங்கள் தேசத்தை கட்டி எழுப்பும் வரலாற்றுச் சாசனம்.

இன்றிலிருந்து இந்த யாப்பு நடைமுறைக்கு வரும் நிலையில், யாப்பின் பிரகாரம் உறுப்பினர்களை இணைத்து, தேர்தல் ஆணையத்தை உருவாக்கி, இடைக்கால நிர்வாக சபை காலம் முடிவடையும் வேளையில் யாப்பின் படி புதிய சபைகள் தெரிவு செய்யப்படும். அத்துடன், அடுத்த சில மாதங்களுக்குள் தேசத்தை வலிமை பெறச் செய்யும் செயல் திட்டங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இன்னும் நான் தெளிவாகக் கூறவிரும்புவது எமது அமைப்பின் செயற்பாடுகளில் தாயகத்தில் வடக்கு. கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பணிகளுக்கே முக்கியத்துவம்!" என்றார்.

அங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவுஸ்த்திரேலியா வாழ் பல்கலைக் கழகப் பேராசிரியர் செல்வா செல்வநாதன் தனது உரையில், "எமது தாயக மக்கள் கடந்த ஏழு தசாப்பதங்களாக தாங்கள் தேர்ந்தெடுத்து பாராளுமன்றம் அனுப்பிய அனுப்பிய அரசியல்வாதிகளால் தொடர்ச்சியா ஏமாற்றப்பட்டுள்ளார்கள். எனவே. இனிமேல் எம் தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளை நாம் நம்பிப் பயனில்லை! எனினும் எமது தலைவர் குறிப்பிட்டுள்ளது போன்று வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் அவர்களது கல்வித் தரத்தை அதிகரிக்கவும் செய்யும் வகையில் எமது திட்டங்கள் அமையவுள்ளன" என்றார்.

தொடர்ந்து சிறப்புறையாற்றிய பல வருடங்களுக்கு முன்னர் தமிழ் மக்களுக்காக ஆரம்பிக்கப்பெற்ற "தமிழ் நெற்" இணையத்தளத்தின் நிறுவனர் ஜெயசந்திரன் கோபிநாத் அவர்களின் பல தரவுகள் மற்றும் சான்றுகள் ஆகியவற்றுடன் தனது உரையை ஆற்றினார்.

அவர் தனது உரையில், "எமது தாயகத்தின் இருப்பைக் காப்பதற்கு நாம் தவறிவிடக் கூடாது. அதற்காக மக்கள் போராட்டங்கள் அங்கு தொடர்ச்சியாக நடத்தப்பெற வேண்டும். குறிப்பாக. தற்போது அநுர அரசின் திட்டமான "மண்டைதீவு கிறிக்கெட் தளம் "எதிர்காலத்தில் மிகப்பெரிய இராணுவத் தளமாகக் கூட மாறலாம் என்ற ஐயப்பாடு எம்மில் பலருக்கு உண்டு. ஆனால் அதை விளங்கிக் கொள்ளாமலோ அன்றி விளங்கியவர்களாகவோ எமது தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்பிய உறுப்பினர் அந்தத் திட்டத்திற்கு தங்கள் ஆதரவை வழங்கி "ஆம்" போடுகின்றார்கள். எமது வடக்கின் பல பகுதிகளை நகரமயமாக்குதல் எமது மண்ணின் தனித்துவத்தை இழந்தவர்களாக ஆக்கிவிடும். அத்துடன் எமது இறைமை. தன்னாட்சி போன்றவற்றின் அடித்தளத்தையெ அழிக்கும் அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் எமக்கு தேவையில்லை என்பதை நாம் அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும். எனவே இவ்வாறான அரசின் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்.அத்துடன் எமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் விடயங்களை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்" என்றார்.


தொடர்ந்து அமெரிக்கா வாழ் சட்டவல்லுனர் மார்க்கண்டு விக்னேஸ்வரன், அவர்கள் சிறிய நூல்வடிவில் அச்சடிக்கப்பெற்ற அனைத்துலக தமிழர் பேரவையின் யாப்பு தொகுப்பை வெளியிட்டு வைத்து உரையாற்றினார்.

தொடர்ந்து யாப்பின் பிரதிகள் அங்கு அழைக்கப்பெற்றிருந்த சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பேச்சாளர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கு கையளிக்கப்பெற்றன.

இங்கே காணப்பெறும் படங்கள் விழாவில் எடுக்கப்பெற்றவையாகும்.






# ”எமது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் லோகன் கணபதி அவர்கள் கனடிய தமிழர்களின் சிறந்த அர்ப்பணிப்புகளுக்கு அடையாளமாகத் திகழ்கின்றார்!”

## மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி நடத்திய பொங்கல் விழாவில் ஒன்றாரியோ மாகாணப் பிரதமர் டக் போர்ட் புகழாரம்!











”எமது ஒன்றாரியோ கொன்சர்வேர்ட்டிவ் அரசாங்கத்தில் மாகாண சபை உறுப்பினராகவும் பாராளுமன்றச் செயலாளராகவும் அங்கம் வகிக்கும் நண்பர் லோகன் கணபதி அவர்கள் கனடியதமிழர்களின் சிறந்த அர்ப்பணிப்புகளுக்கு அடையாளமாகத் திகழ்கின்றார்! அவரது அர்ப்பணிப்பையும் சேவை மனப்பான்மையையும் நான் அவரோடு பழகத் தொடங்கிய அல்லது பணியாற்றத் தொடங்கிய காலம் தொடக்கம் அவதானித்துள்ளேன். இன்று நீங்கள் அனைவரும் அவரது வழிகாட்டலில் இன்று உங்கள் பண்பாடு மற்றும் கலைகளைப் பேணுதருக்கு உதாரணமாக விளங்கும் பொங்கல் மற்றும் தமிழர் மரபுரிமை மாதம் ஆகியவற்றை ஒரே குடையின் கீழ் கொண்டாடுகின்றீர்கள். எமது மாகாண அரசாங்கமும் இவ்வாறான தமிழர்களின் பண்பாட்டு விழாக்களுக்கு ஆதரவு வழங்குவதில் பெருமிதம் அடைகின்றது“

இவ்வாறு கடந்த 24-01-2026 அன்று சனிக்கிழமை அன்று மார்க்கம் நகரில் அவரது தொகுதியில் அமைந்துள்ள “வேர்டிக் மண்டபத்தில்' நடைபெற்ற மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி நடத்திய பொங்கல் விழாவில் ஒன்றாரியோ மாகாணப் பிரதமர் டக் போர்ட் அவர்டகள் புகழாரம் சூட்டினார். !

மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் தனது அலுவலக உத்தியோகத்தர்கள்-குடும்பத்தினர் - மற்றும் தொண்டர்கள் ஆகியோரின் துணையுடன் மேற்படி அழகியப் பெருவிழாவை நடத்தினார். ஸ்காபுறோவில் இயங்கிவரும் “விஜயா யுவல்லறி தங்க நகை விற்பனை நிறுவனம் மேற்படி “பொங்கல் விழாவிற்கு பிரதான அனுசரணை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் ஒன்றாரியோ மாகாண அரசின் அமைச்சர்களும் மாகாணசபை உறுப்பினர்களும் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஊடகவியலாளர்களும் சிவாச்சாரியப் பெருமக்களும் மேற்படி விழாவில் கலந்து சிறப்பித்தார்கள். கலை நிகழ்ச்சிகளும் உரைகளும் இடம் பெற்றன.

**LJI Journalist Ganesh**

# ஜனாதிபதி அனுரகுமார உருவாக்கவுள்ள "மலைநாட்டு அதிகார சபை" நாட்டின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாகி உழைத்து வரும் மலையக மக்கள் சார்ந்ததா? அல்லது மக்கள் சக்தி சார்ந்ததா?

## – மலையக சமூக ஆய்வு மையம் கேள்வி



டித்வா புயலால் அழிந்த மற்றும் செதமடைந்த வழி பாட்டு தலங்களை மீள கட்டமைக்கும் பணியின் அங்குராப்பண கூட்டம் கம்பளை தெரகல போதிருக்காராமை விகாரையில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற போது அங்கு உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ”நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு பலம் பொருந்திய மலைநாட்டு அதிகார சபையை உருவாக்குவேன்” என்றார். இவர் உருவாக்குவதாக கூறும் சபை மலையக மக்கள் என நாம் அடையாளப்படுத்தும் இந்நாட்டில் 200 வருட வரலாற்று வாழ்வை தமதாக்கி நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் முதுகெலும்பாகி உழைத்து வரும் மக்கள் சார்ந்ததா? அல்லது மக்கள் சக்திக்குள் மறைந்திருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் பின்னணியில் அதிகார சபையா? சிங்கள பௌத்தத்தை மையப்படுத்திய அதிகார சபையா? என மலையக சமூக ஆய்வு மையம் கேள்வி எழுப்பதோடு இது தொடர்பில் மலையக அரசியல் செயற்பாட்டாளர்களும், சிவில் சமூகத்தினரும் விழிப்பாகவும் அவதானத்துடனும் இருக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றது.

கடந்த கால ஆட்சியாளர்கள் அனைவரும் மலையக மக்களை உழைப்பின் வர்க்கமாக மட்டும் பார்த்து அவர்களை ஒடுக்கி பின்தங்கிய வாழ்வு நிலைக்குள் தள்ளி, தேசிய வருமானத்தை அதிகரிப்பதிலும் அவர்களின் உழைப்பை கொள்ளையடிப்பதிலும் முழுக்கவனத்தையும் செலுத்தினர். சிங்கள பௌத்த பேரினவாத அரசியல் தலைமைகள் மலையகத் தமிழ் சமூகம் எழுவதற்கு இடமளிக்கவில்லை. எனினும் சுய முயற்சியால் கல்வி, அரச தொழில், வர்த்தகம்... போன்ற துறைகளில் மலையகத்தில் முன்னேரிய வரலாறும் உண்டு.

இந்த நிலையில் 2018ஆம் ஆண்டு நல்லாட்சி காலத்தில் இம் மக்கள் சமூகத்தின் கௌரவம் மிகுந்த சமூக பாதுகாப்பு அபிவிருத்தி வளர்ச்சிக் கருதி உருவாக்கப்பட்டதே பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை. ஆனால் கடந்த காலங்களில் அது இயங்கும் நிலையில் வைக்கப்படவில்லை. அதற்கு நாட்டின் அரசியல், பொருளாதார, காரணிகளும் இடம் கொடுக்கவில்லை எனலாம்.

கடந்த 2024 ஆம் ஆண்டு தேர்தல் காலத்தில் மலையக மக்கள் விடயத்தில் ஹற்றன் பிரகடனத்தை வெளியிட்ட தேசிய மக்கள் சக்தி தனது பிரகடனத்தின் பிரதான உள்ளடக்கத்தை மறந்த நிலையில் அபிவிருத்தி சபையையும் இயங்கா நிலையில் மட்டுமல்ல அதனை நிரந்தரமாகவே அகற்றி விடுவதற்கும் பெருந்தோட்ட அமைச்சின் கீழ் கொண்டு வந்து அதற்கு சாவு மணி அடிப்பதற்கும் வழி தேடியதை நாம் அறிவோம்.

தற்போது தனி கட்சியின் ஆட்சியை பலப்படுத்தும் நோக்கில் காய் நகர்த்தும் தேசிய மக்கள் சக்தி, அரச கட்டமைப்புக்களை அசைக்கும் சக்தி மிகுந்த பிரஜாசக்தி குழுக்களை கிராமங்களில் அமைத்து வருவதோடு டித்வா புயலைத் தொடர்ந்து ”நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு பலம் பொருத்திய மலைநாட்டு அதிகார சபையை உருவாக்குவேன்” என ஜனாதிபதி கூறியதை சந்தேகக் கண்கொண்டே பார்க்கத் தூண்டுகின்றது. ஏனெனில் இந்த அதிகார சபை உண்மையில் பின் தள்ளப்பட்டுள்ள மலையக மக்களின் வாழ்வியல் அபிவிருத்தி சார்ந்த அதிகார சபையா? இல்லை சிங்கள பௌத்த கருத்தியலை மையப்படுத்தி அதனை விரிவாக்கம் செயற்பாட்டுக்கான அதிகார சபையா? என எம்மை சிந்திக்க வைக்கின்றது.

வடக்கு மற்றும் கிழக்கில் மகாவலி அதிகார சபை தமிழர்களின் பூர்வீக காணிகளை பறிப்பதும், தொல்லியல் திணக்கமும், படையினரும், சிங்கள பௌத்த பேரினவாத பிக்குகள் நேரடியாகவே களத்தில் நின்று அதற்கு துணை புரிவதையும் நாம் அறிவோம். தனியார் காணிகளையும் அவர்கள் விட்டு வைக்கமாட்டார்கள் என்பதையும் ஆதிக்க மனநிலையின் உச்சமாக தையிட்டியில் தனியார் காணிகளைப் பறித்து விகாரை கட்டியுள்ளதையும் நாம் அறிவோம்.

மலையகத்தில் படையினரின் பங்களிப்பின்றி அல்லது தேவையெனில் அவர்களின் துணையோடு மகாவலி அதிகார சபை வடக்கு கிழக்கில் செயல்படுவதைப் போன்று மலையத்திலும் இயங்குவதற்கான வேலைத் திட்டத்தினை முன்னெடுப்பதற்காகவே ஜனாதிபதி பலம் பொருந்திய மலைநாட்டு அதிகார சபையை உருவாக்குவதாக நினைக்கத் தோன்றுகின்றது. அவர்களின் பார்வையிலே மலையகம் என்பது அனைத்து மக்களையும் உள்ளடக்கிய விரிந்த பூமி பிரதேசத்தையாகும். அதனை அவர்களின் அரசியல் நோக்கோடு பார்த்தே செயல்படுவார்கள் என்பது தெளிவு. அதிகார சபை தொடர்பான கருத்தினை விகாரையில் வைத்து கூறுவதன் உள்நோக்கம் எம்மால் விளங்கிக் கொள்ள முடியும்.

ஜனாதிபதியின் தற்போதைய கூற்றுப்படி 2018 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மலையக மக்களுக்கான அபிவிருத்தி சபை காணமலாக்கப்பட்டுவிடும் என்பது உறுதி. புதிதாக உருவாக்குவதாக கூறும் நினைத்துப் பார்க்க முடியாத பலம் பொருந்திய மலையக சபை தொடர்பான கருத்தாடல் நாடாளுமன்றத்தில் வரும்போது மலையக அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என்பதோடு மலையக அரசியல் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் கைகோர்த்து நின்றால் மட்டுமே தற்போது காணி தொடர்பான கருத்தாடலை பலமடை செய்யலாம். இல்லையெனில் அது எமது நிரந்தர கனவாகவே அமைந்து விடும் அபாயம் உள்ளது என்பதையும் மலையக சமூக ஆய்வு மையம் எச்சரிக்கையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

மலையக சமூக ஆய்வு மையம்



உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160




Carefirst Family Health Team
Carefirst
Family Health Team
Accepting New Patients
புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்
• அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
• உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
• நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
• நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.
அவர் விபரம்:
டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)
டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.
உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.
Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam
Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca
11/24
Steeles Ave.
Kennedy Road
McNicoll Ave.
Silver Star Blvd.
Midland Ave
N
Finch Ave.




Happy Thai Pongal and Tamil Heritage Month!
தை பொங்கல் மற்றும் தமிழர் மரபுரிமை மாத நல்வாழ்த்துக்கள் !
JEAN YIP
Member of Parliament
Scarborough–Agincourt
@JeanYip3
/JeanYip.Scarborough
Jean.Yip.C1@parl.gc.ca

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US



# NESAN
# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

கரிநாள்
பெப்.04

# கண்டனப் போராட்டம்

Tamils
Black Day
பெப்.-04






## ஈழத் தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்பு நாள்!

சிறிலங்கா துணைத் தூதரகம் முன்பாக
1 Eglinton Ave., East, Toronto (Yong & Eglinton)
பெப்ரவரி 04 – புதன்கிழமை, மாலை 2:00 மணி.

**Eelam Tamils Call on International Community
To Recognize Their Right to Self Determination
END THE OCCUPATION**

**647-914-2178**

கனடியத் தமிழ் சமூகம், மாணவர் சமூகம்



# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிங்கள "ஸ்ரீ"யும் தமிழ் "ஸ்ரீ"யும்

***"1957 இல், தனிச் சிங்களச் சட்டம் அமுலான பின்னர், இலங்கையில் வாகனத் இலக்கத் தகடுகளில் சிங்கள "ஸ்ரீ" எழுத்தைப் பயன்படுத்தியதற்கு எதிராகத் தமிழரசுக் கட்சி தலைமையில் போராட்டம் வெடித்து சிங்கள "ஸ்ரீ" எழுத்து கறுப்பு மை பூசப்பட்டு, தமிழ் "ஸ்ரீ" யாக மாற்றப்பட்டது. இந்த போராட்டமே தமிழரசுக்கட்சியின் வளர்ச்சிக்கும் இருப்புக்கும் பலமான அடித்தளமாக அமைந்தது. ஆனால் அதே தமிழரசுக்கட்சி தற்போது தமது கட்சியிலுள்ள மக்கள் பலமான தமிழ் "ஸ்ரீ"க்கு (ஸ்ரீதரனுக்கு) எதிராக முன்னெடுக்கும் சதி தமிழரசுக் கட்சியின் அடித் தளத்தை, மக்கள் பலத்தை ஆட்டம் காண வைக்கப் போகின்றது."***

**கே.பாலா -**

தமிழரசுக்கட்சியின் தலைவராக பொதுக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீதரனை சட்ட சதியினால் அப்பதவியை ஏற்கவிடாது தடுத்தவர்கள் தற்போது அவரை பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதாக அறிவித்துள்ளதன் மூலம் ஸ்ரீதரனுக்கு எதிரான தமது "பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியை பறிப்பது, பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பறிப்பது, தமிழரசுக்கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்குவது" என்ற 3 சதிகளில் ஒன்றை சகுனித்தனமாக அரங்கேற்றியுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக என்று சிவஞானம் ஸ்ரீதரன் வாக்கெடுப்பு மூலம் பொதுக்குழுவினால் தெரிவுசெய்யப்பட்டாரோ அன்று அவருக்கு பிடித்த "சனி" இன்றுவரை அவரை விடாது துரத்தி வருகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை ஸ்ரீதரன் ஆதரித்தமையை சாட்டாக வைத்து "ஸ்ரீதரன் கட்சிக்கு கட்டுப்படவில்லை, தலைமையின் முடிவுக்கு முரணாக செயற்படுகின்றார் ஆகவே அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்ற சதியை முன்னெடுத்தனர். ஆனால் அது வெற்றிபெறவில்லை.

அடுத்ததாக ஸ்ரீதரனை பாராளுமன்றத் தேர்தலில் எப்படியாவது தோற்கடித்து அவரின் மக்கள் செல்வாக்கை இல்லாமல் செய்து அதன்மூலம் அவரை கட்சியிலிருந்து வெளியேற்றத் திட்டமிட்டமிட்டு "ஸ்ரீதரன் மதுபானசாலைக்கான அனுமதிகளை ரணில் அரசிடமிருந்து அரசியல் இலஞ்சமாக பெற்றுள்ளார்" என்ற குற்றச்சாட்டை பாராளுமன்றத்தேர்தலின்போது தீவிர பிரசாரமாக முன்னெடுத்தனர். ஆனால் ஸ்ரீதரனின் வெற்றியை தடுப்பதற்கு பதிலாக அவர்களே தேர்தலில் மண்கவ்வினர்.

சற்றும் மனம்தளராத விக்கிரமாதித்தனாக சற்று மாற்று யோசித்தவர்கள் ஸ்ரீதரனுக்கு எதிராக சிங்களவர்களை பயன்படுத்தத் தொடங்கினர். இவர்களின் பின்னணியில் ஸ்ரீதரன் சட்டத்துக்கு முரணாக சொத்துக்கள் வைத்திருப்பதாக சிவில் ஆர்வலர் சஞ்சய் மஹாவத்த என்பவர் குற்றப் புலனாய்வுத்துறையில் முறைப்பாடு செய்தனர். அந்த முறைப்பாட்டை உடனடியாக விசாரணை செய்து உண்மையை வெளிப்படுத்துமாறு ஸ்ரீதரனும் வலியுறுத்தியபோதும் சில மாதங்கள் கடந்தும் அந்த முறைப்பாடு கிடப்பில்தான் கிடக்கின்றது.

அதன் தொடர்ச்சியாக அரசியலமைப்பு பேரவையில் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாகவுள்ள ஸ்ரீதரன் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியாகவுள்ள ஒருவரை கணக்காய்வாளர் நாயகமாக அரசு நியமிக்க ஆதரவாக வாக்களித்து விட்டார் என்ற குற்றச்சாட்டை சிங்கள இனவாத எம்.பி.க்களான சாமர சம்பத் தசாநாயக்க, தயாசிறி ஜயசேகர ஆகியோர் மூலமாக பாராளுமன்றத்தில் முன் வைக்க வைத்து அதனைப்பயன்படுத்தி கட்சியின் கட்டுப்பாட்டை மீறி இராணுவ அதிகாரி ஒருவருக்கு ஸ்ரீதரன் ஆதரவாக வாக்களித்து விட்டார் என்ற குற்றச்சாட்டில் ஸ்ரீதரனிடம் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு விளக்கம் கோரியதுடன் அரசியலமைப்பு பேரவையிலிருந்து ஸ்ரீதரன் உடனடியாக விலக வேண்டுமெனவும் பணித்தது.

ஆனால் "அரசியலமைப்பு பேரவை ஒரு சுயாதீனமான பேரவை. இதில் எந்தவிதமான அரசிய தலையீடும் கட்சி செல்வாக்கும் இருக்க முடியாது. இதில் எனது கட்சியின் செல்வாக்குகளை நான் பிரயோகிக்க முடியாது இந்த சபை மூலம் கட்சி சார்பு அரசியலும் செய்ய முடியாது. செய்யக்கூடாது அரசியலமைப்பு பேரவையில் எனது பங்களிப்பும் வாக்களிப்பும் மனச் சாட்சியின் படியானவை. அத்துடன் அரசியலமைப்பு பேரவைக்கு நான் எனது கட்சியின் அரசியல் குழு அல்லது மத்திய செயற்குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் எனது கட்சியின் அரசியல்குழுவிலுள்ள சிலரின் தனிப்பட்ட அரசியல் விரோதங்களுக்காகவும் நிகழ்ச்சி நிரலுக்காகவும் நான் பதவி விலக முடியாது" என ஸ்ரீதரன் உறுதியாக கூறிவிட்டார்.

இவ்வாறான நிலையில்தான் இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் ஆலோசனையை பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தினால் அவரின் பாராளுமன்ற குழுத் தலைவர் பதவியை மீளப்பெற கட்சி தீர்மானித்துள்ளதாக இலங்கை தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் அறிவித்துள்ளார். அரசியல்குழு அவர்மீது நம்பிக்கை வைத்து ஏகமனதாக பாராளுமன்ற குழுத் தலைவர் பதவியை அவருக்கு வழங்கியது. அரசியல் குழு இரண்டு தடவைகள் அவர் பாராளுமன்ற அரசியல் பேரவையிலிருந்து இராஜிநாமா செய்ய வேண்டும் என்ற ஆலோசனையை வழங்கியிருந்தது. தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் ஆலோசனையினை ஏற்றுக்கொள்ள ஸ்ரீதரன் மறுத்ததன் காரணத்தினால் அரசியல் குழுவினால் வழங்கப்பட்ட நியமனத்தினை மீளப்பெறுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் முக்கிய குற்றச்சாட்டு நாட்டின் கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்க ஒரு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிக்கு ஸ்ரீதரன் ஆதரவாக வாக்களித்து விட்டார் என்பதாகவே உள்ளது. அதாவது தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்ட இனப்படுகொலையில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தை சேர்ந்த ஒரு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிக்கு ஸ்ரீதரன் ஆதரவாக வாக்களித்து விட்டார். இதன் மூலம் தமிழரசுக்கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராக ஸ்ரீதரன் செயற்பட்டு விட்டார் என்பதே தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் முக்கிய குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டு நியாயம் என்றால் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவிடம் சில கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது.

இலங்கை இராணுவத் தளபதியாகவிருந்து தமிழ் மக்களுக்கு எதிரான இறுதிப்போரை வழிநடத்தி பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களை இனப்படுகொலை செய்ததன் முக்கிய சூத்திரதாரியான ஜெனரல் சரத்பொன்சேகா 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கியபோது சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமென இலங்கை தமிழரசுக் கட்சி பகிரங்க வேண்டுகோள் விடுத்ததுடன் சரத்பொன்சேகாவுக்கு ஆதரவாக பிரசாரங்களும் மேற்கொண்டதுடன் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக வாக்களித்ததும் எந்த வகையில் நியாயம்?

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின் மூலம் சபைகளில் ஆட்சியமைக்க தமிழினத் துரோகி என தமிழ் மக்களினால் அடையாளப்படுத்தப்படும் இராணுவ துணைக்குழுவாக செயற்பட்ட, நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகள் படுகொலை செய்யப்பட, காணாமல் போக காரணமாகவிருந்த, மனிதப் படு கொலையாளர் எனக் குற்றம் சாட்டப்பட்ட ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமான டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்ப்பாணம் ஸ்ரீதர் திரையரங்கிலுள்ள அலுவலகம் தேடிச்சென்று தமிழரசுக்கட்சியின் தலைமை, அதாவது பதில் தலைவரான சிவஞானம் ஈ.பி.டி.பி.யின் காலடியில் மண்டியிட்டது குற்றமில்லையா? சில சபைகளில் அவரின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளது குற்றமில்லையா?

2017 ஜனவரியில் சுமந்திரனைக் கொலை செய்யத் திட்டமிட்டதாகக் குற்றம் சாட்டி இலங்கை புலனாய்வுப் பிரிவினர் சிலரைக் கைது செய்தனர். இதனைத்தொடர்ந்து சுமந்திரனுக்கு விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது. அவரது வீடு, அலுவலகம், வாகனம் என அனைத்திலும் விசேட அதிரடிப்படையினரே நிறைந்திருந்தனர். சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் தனது சொந்த தொகுதிக்கு செல்லும்போதுகூட அதிரடிப்படையினர் புடைசூழவே சென்றார். ஸ்ரீதரன் ஒரு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிக்கு அதுவும் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் எதுவும் முன்வைக்கப்படாத ஒருவருக்கு ஆதரவளித்தது குற்றமென்றால் சுமந்திரன் தமிழினப் படுகொலையாளிகளின் ஒரு தரப்பான விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் வடக்கில் வலம் வந்தது குற்றமில்லையா? அது அரசாக வழங்கிய பாதுகாப்பு என்று கூறினாலும் அதனை வேண்டாம் என மறுக்கும் உரிமை சுமந்திரனுக்கு இருந்தது. ஏன் மறுக்கவில்லை?

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசியக்கட்சிகளினதும் தமிழ் பொது அமைப்புகளினதும் ஆதரவுடன் தமிழ் பொது வேட்பாளராக தமிழின உணர்வாளரும் தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தருமான அரியநேத்திரன் களமிறங்கிய போது தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாக அரிய நேத்திரனை தோற்கடித்தே தீருவோம். சஜித் பிரேமதாசாவை வெற்றிபெற வைப்போம் என தமிழரசுக்கட்சியின் தற்போதைய பதில் பொது செயலாளர் பொது வெளியில் சூளுரைத்ததுடன் சொன்னதையும் செய்தார். தமிழ் தேசிய உணர்வாளரான அரியநேத்திரனுக்கு வாக்களிக்க வேண்டாம், சஜித் பிரேமதாசவுக்கு வாக்களியுங்கள் என தமிழ் மக்களின் விருப்புக்கு எதிராக செயற்பட்ட குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? தமிழ் தேசிய உணர்வாளருக்கு எதிராகவும் சிங்கள இனவாதி ஒருவருக்கு ஆதரவாகவும் தமிழரசுக்கட்சியின் தலைமை செயற்பட்டது குற்றமில்லையா?

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிக்கான வாக்கெடுப்புக்கு பின்னர் வேறு ஒரு தெரிவுக்கான வாக்கெடுப்பு அரசியலைப்பு பேரவையில் நடந்தபோது அதில் ஸ்ரீதரன் வாக்களிக்கவில்லை. இதனையும் வாக்களிக்காது விட்டது மூலம் ஸ்ரீதரன் அரசுக்கு ஆதரவாக செயற்பட்டுள்ளார் என்று தமிழரசின் சில பிரகிருதிகள் ஸ்ரீதரனுக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்தனர். அநுரகுமார அரசின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாக்கெடுப்பு இடம்பெற்றபோது தமிழரசுக்கட்சி வாக்களிக்கவில்லை. அப்படியானால் அநுரகுமார அரசின் வரவு செலவுத் திட்டத்திற்கு தமிழரசுக்கட்சி மறைமுகமாக ஆதரவளித்ததா?




(தொடர்ச்சி 17 பக்கம்)

Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI
## Pawn Brokers





32
வருட சேவைகள்

# கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

(15 பக்கம் தொடர்ச்சி)

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிங்கள "ஸ்ரீ"யும் தமிழ் "ஸ்ரீ"யும்

இது மட்டுமா ஸ்ரீதரன் ஓய்வுபெற்ற சிங்கள இராணுவ அதிகாரி ஒருவருக்கு ஆதரவாக அரசிலமைப்பு பேரவையில் வாக்களித்து விட்டார் என்பதற்காக கொதித்தெழுந்து அவரது பாராளுமன்றகுழுத் தலைவர் பதவியை பறிப்பதில் முன்னின்ற இருவரில் ஒருவர் தனது மருமகளாகவும் சம்பந்தியாகவும் சிங்களக் குடும்பத்துடன் இணைந்துள்ளார். மைத்திரிபால சிறிசேன தலைவராக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் முக்கிய பதவியில் இருந்தவரும் பின்னர் அங்கிருந்து மஹிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுனவுக்கு தாவி தேர்தலில் போட்டியிட்டு மக்களினால் நிராகரிக்கப்பட்ட நிலையில் தமிழரசுக்குள் பின்கதவால் நுழைந்தவருமான இன்னொருவரோ தனது வருங்கால மனைவியாக, தற்போதைய காதலியாக ஒரு சிங்களப் பெண்ணுடன் தொடர்பில் இருக்கின்றதாக தகவல்கள் உள்ளபோதும் தற்போது அதனை வெளிக்காட்டாமல் இருக்கின்றார். இவர்கள்தான் ஓய்வு பெற்ற சிங்கள இராணுவ அதிகாரி ஒருவருக்கு ஸ்ரீதரன் வாக்களித்துவிட்டதாக "தமிழ் தேசிய உணர்வோடு" குமுறுகின்றனர்.

எனவே தற்போது அரசியலமைப்பு பேரவையில் ஸ்ரீதரன் ஒரு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிக்கு வாக்களித்து விட்டார் என்ற குற்றச்சாட்டை பயன்படுத்தி தமது உள்வீட்டு அரசியல் எதிரியான ஸ்ரீதரனை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி அந்தப் பதவியைக் கைப்பற்றுவதுடன் தமிழரசுக்கட்சியிலிருந்து ஸ்ரீதரனை வெளியேற்றும் சதியே முன்னெடுக்கப்படுகின்றது.

1957 இல், தனிச் சிங்களச் சட்டம் அமுலான பின்னர், இலங்கையில் வாகனத் இலக்கத் தகடுகளில் சிங்கள "ஸ்ரீ" எழுத்தைப் பயன்படுத்தியதற்கு எதிராகத் தமிழர் தரப்பில் போராட்டங்கள் வெடித்தன. இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைமையிலேயே இப்போராட்டம் தீவிரமடைந்து சிங்கள "ஸ்ரீ" எழுத்து கறுப்பு மை பூசப்பட்டு, தமிழ் "ஸ்ரீ" யாக மாற்றப்பட்டது. தமிழரசுக்கட்சியின் தீவிர தமிழ் தேசியப்பற்றை வெளிப்படுத்திய இந்த போராட்டமே தமிழரசுக்கட்சியின் வளர்ச்சிக்கும் இருப்புக்கும் தமிழ் மக்களின் பேராதரவுக்கும் பலமான அடித்தளமாக அமைந்து தமிழரசுக்கட்சியை தமிழ் தேசிய இனத்தின் தாய்க் கட்சியாக மாற்றியது.

தமிழ் தேசிய உணர்வாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் வெளியேற்றங்கள், உறுப்புரிமை நீக்கங்கள், பழிவாங்கல்கள், பதவி பறிப்புக்கள், சதிகள். தமிழரசுக்கட்சியை மிகவும் பலவீனப்படுத்தி, தமிழ் மக்கள் வெறுத்து ஒதுக்கும் ஒரு கட்சியாக மாற்றி வருகின்றது. இதற்கு உதாரணமாக அண்மையில் நடந்து முடிந்த பாராளுமன்றத்தேர்தலில் வடக்கில் தமிழரசுக்கட்சி அடைந்த படுதோல்வியையும் அதன்பின்னர் நடந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்ட பரிதாப நிலையையும் எடுத்துக் கொள்ளமுடியும். இவ்வாறானதொரு நிலையில் இந்த நிலையை மேலும் மோசமாக்கும் வகையில் தமிழரசுக்கட்சி தற்போது தமது கட்சியிலுள்ள மக்கள் பலமான தமிழ் "ஸ்ரீ"க்கு (ஸ்ரீதரனுக்கு) எதிராக முன்னெடுக்கும் சதி தமிழரசுக் கட்சியின் அடித் தளத்தைஆட்டம் காண வைப்பதுடன், தற்போதுள்ள கொஞ்ச நஞ்ச மக்கள் பலத்தை அடியோடு இல்லாமல் செய்யும் என்பது மட்டும் உண்மை.




Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD
HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)
www.paulainslie.com 416-396-7222


# தைமகளே பிறந்து வா

தைமகளே பிறந்து வா
தைமகளே பிறந்துவா தைத்திருநாட் கொண்டாடி
தரணி எங்கும் ஒளிக்கவே!
தேமதுரத் தமிழொலி தேசமெலாம் ஒலித்திட
தாமதம் செய்திடா வருவாய்
நம்பிக்கைக் கீற்று நாளும் தெரியும்
நம்வாழ்வும் நன்றாய்ச் சிறக்கும்
எம்மவர் வாழ்வில் எல்லாம் கிடைக்கும்
எல்லோர் மனதிலும் இனிக்குமே!

முற்றம் முழுதும் முத்தாய்க் கோலமிட்டு
மூலையில் கரும்பு நாட்டியே!
சுற்றியே தோரணத்தால் சோடனை செய்து
சுந்தரமாய் மாவிலை தூக்கினோம்
புதிரெடுத்து நீராடி புத்துடை அணிந்துமே!
பானையில் புனித நீரிட்டோம்
பதியும் சதியுமாய்ப் பகலவனை வணங்கியே!
பரமனைப் பணிந்து நின்றோமே!

வெள்ளை வேட்டியுடன் தலைப்பாகை கட்டியே!
வஞ்சிபோல் பானையை அலங்கரித்து
கள்ளமற்ற பாலைக் கலயத்தில் விட்டே!
கனன்ற அடுப்பில் வைத்தோம்
பாங்காய்ப் பசும்பால் பொங்கிச் சரிக்கவே!
பயறுடன் பச்சரிசி பானையிட்டே!
தேங்காய்த் துருவலும் தித்திக்கச் சேர்த்து
தகிக்கும் உலையில் இட்டோமே!

சமமாய்ச் சர்க்கரை சத்தான கஸ்கொட்டை
சுவைமிகு தேனும் விட்டு
அமரர் போற்றும் அருமைப் பொங்கலுக்கு
ஆநெய்யும் அளவாய்க் கலந்தோம்
கற்கண்டு முந்திரி கச்சிதமாய்ச் சேர்த்தே!
கனிதரும் பொங்கலை பொங்கினோம்
பற்றொடு பொங்கல் படைத்து வைக்கவே!
பலவகைப் பொருட்கள் எடுத்தோமே!

சுற்றம் சூழவே சுயமாய்க் கூடியே
சத்தான பொங்கல் தந்திடவே!
முற்றிய கரும்பும் முக்கனியும் தயிரும்
மலர்களும் பருவ இளநீரும்
பக்திப் பாட்டும் பட்டாசு வெடியுடன்
பரிதிக்கு படைத்து வைத்தோம்
பக்கத்து வீட்டார்க்கும் பகிர்ந்து கொடுத்து
பதமான பொங்கலைப் புசித்தோமே!

பலகார வகையும் பதமாய்ச் செய்தோம்
பசியோடு வந்தோர்க்கும் பரிமாறினோம்
விலகாமல் இருந்த வீண்பகை எல்லாம்
விலக்கியே ஒன்றாய்ச் சேர்ந்தே!
ஏர்பிடித்த உழவனை இதயத்தில் ஏற்றியே!
எல்லோரும் கூடியே வாழ்த்தினோம்
பார்புகழ் மக்களாய்ப் பலகலை கற்றுமே!
பல்லோர் போற்றிட வாழ்வோமே!

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன் (416) 844-7453**

# கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்
## சர்க்கரைப் பொங்கல் விழா - 2026
## சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: **March 28, 2026 (Saturday) 9.00 AM**

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

| | |
|---|---|
| மழலைகள் (JK) | : 01-01-2021 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆரம்பப் பிரிவு (SK) | : 2020 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 1 (Gr.1) | : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 2 (Gr.2) | : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 3 (Gr.3) | : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 4 (Gr.4) | : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 5 (Gr.5) | : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 6 (Gr.6) | : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 7 (Gr.7) | : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 8 (Gr.8) | : 2012 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர் |

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற குடும்பத்தில் முதல் போட்டியாளருக்கு $10.00, அடுத்து வருவோர்க்கு தலா $5.00 வீதம் அறவிடப்படும்.
5. **மே 2, 2026**ல் நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 10, 2026க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ..........................

குடும்பப் பெயர்: ..........................

பிரிவு: ..........................

பிறந்த திகதி: ..........................

தொலைபேசி ..........................

email: ..........................

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

Secretary,
Canada Hindu Maamantram,
39, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 905.785.6526
416.356.7323, 647.992.0587

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 10, 2026**





"உணர்வால் இணைவோம்"
வரணி ஒன்றியம் கனடா
பெருமையுடன் வழங்கும்
தமிழ் மரபு திங்கள்
பொங்கல் விழா
இயல், இசை, நடன
பல்சுவை நிகழ்ச்சிகள்
ஜனவரி – 31 – 2026
மண்ணையும் மனங்களையும்
நினைந்து மகிழ்வுற
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.
அனுமதி இலவசம்
January 31st 2026, Staturday @ 5.30 PM
Venue : Canada Kanathasamy Kovill Hall, 733 Birchmount Rd,
Scarborough, ON M1K 1R5
More Info : +1 416-771-6890
varanyontriumcanada@gmail.com
Varany Ontrium Canada

# இவ்வார ராசிபலன்

**30-01-2026 வெள்ளி தொடக்கம் 05-02-2026 வியாழன் வரையும்**




**மேஷம்:** புதிய வாய்ப்புக்கள் வரும். பொல்லாத காரியங்கள் சொல்லாமல் விலகும். புத்தி சாதுர்யம் கூடும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். புதிய வாகனம் சேரும். தீய எண்ணம் விலகும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். திடீர் தனவரவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். செயல் திறமை அதிகரிக்கும். கடன்சுமை அதிகரிக்கும். கடின உழைப்பு தேவைப்படும். கால்நடைகளால் லாபம் தரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. வீண் செலவுகள் குறையும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். அரசியலில் புகழ் சேரும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. கல்விக்கடன் ஏற்படும். குடும்ப மன நிறைவு தரும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத் திறன் கூடும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர்கள் நட்பு ஏற்படும். பணவிரயம் ஏற்படும். சொத்துக்கள் சேரும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். கல்வியில் கவனம் குறையும். போட்டிகள் மறையும். லாபம் திருப்தி தரும். மன அமைதி கூடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப ஒற்றுமை ஓங்கும். வெற்றி நிலை தொடரும். இடமாற்றம் நன்மை தரும். பதவியில் உயர்வு வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: *2,1,5,9*
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P




**ரிஷபம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். நண்பரால் சங்கடம் நேரும். நடவடிக்கையில் மாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் சேரும். பெற்றோர்களால் பாராட்டப் பெறுவீர்கள். செயல் விவேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை வெளிப்படும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். மனை வாங்கும் சிந்தனை உண்டு. மனைவியால் ஆறுதல் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்தநிலை அகலும். கடன் உதவி கிட்டும். அதிகாரியின் ஆதரவு பெருகும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆன்றோர் வாழ்த்து கிட்டும். வியாபார வளர்ச்சி உண்டு. கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி ஏற்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் வெளிப்படும். பெருமைகள் கூடி வரும். வாய்ப்பேச்சில் கவனம் தேவை. விசேஷ பலன்கள் உண்டு. வறுமை நிலை மாறும். வஸ்திர தான பிரார்த்தனையால் வளமும், நலமும், ஜெயமும் உண்டாகும். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடன் பிரச்சனை தீரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: *9,5,4,3*
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மிதுனம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கும் வாரம். காரிய அனுகூலம் தரும். பூர்வீகச் சொத்து வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் வரும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். மற்றவர் உதவி கிட்டும். உறவினர்கள் பாராட்டு கிட்டும். உத்தியோக உயர்வு கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் உயர்வு கிட்டும். எதிர்பாராத ஏற்றம் கிட்டும். இனிப்பானச் செய்திகள் வரும். கோதுமை தானப் பிரார்த்தனையால் குலவிருத்தி சேரும். மனை வாங்கும் சிந்தனையும், மனதில் உள்ள காதலும் பூர்த்தியாகும். ஆடம்பர சுகங்கள் கூடும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மற்றவர்களால் மனஅமைதி கெடும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் தடை ஏற்படும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் ஏற்படும். வாழ்க்கை வசதி பெருகும். அரசாங்க அனுகூலம் கூடும். இளமையோடும் பெருமையோடும் காட்சியளிப்பீர்கள். பிள்ளைகள் வகையில் இருந்த தொல்லைகள் விலகும். தீர்த்த யாத்திரைகள் உண்டு. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். காரியத்தடை அகலும். நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். புத்திரரால் பூரிப்பு உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சியுண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: *5,3,2,9*
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,A




**கடகம்:** வீரியத்தோடு செயல்படும் வாரம். இரும்புத்தொழில் லாபம் உண்டு. சங்கடங்கள் அதிகமாகும். அரசியலில் ஆதாயம் உண்டு. வேலைப்பளு கூடும். அரிசி தானப் பிரார்த்தனையால் ஆயுள் விருத்தி உண்டாகும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வியாபாரத்தில் வெகு லாபம் கிடைக்கும் காலம். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். மாணவர் பாராட்டு பெறுவர். அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். இனிக்கும் சம்பவம் அமையும். தொழில் நிம்மதி கொடுக்கும். சகோதரியால் லாபம் உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். விரக்தி நிலை மாறும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் வரும். எள் தானப் பிரார்த்தனையால் ஏற்றமும், மாற்றமும் உண்டாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். நண்பர்கள் கவனம் தேவை. முயற்சி பலன் தரும். பழிச்சொல் தேடி வரும். காரியம் இழுபறியாகும். சுபிட்ஷம் பெருகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. கால்நடைகளால் பலன் உண்டு. வருமானத் தடை உண்டு. பணியாட்களால் தொல்லை ஏற்படும். கல்வியில் மந்த நிலை காணப்படும். வீடு, மனை யோகம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை எதுவாக இருந்தாலும் கைமேல் பலன் கிடைக்கும். ஆரோக்யம் அதிகரிக்கும். ஆதாயம் மிகுதியாகும். கஷ்ட காலம் விலகும். சுபச்செய்திகள் வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: *4,7,9,1*
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,V




**சிம்மம்:** உடல்நலம் ஷேமம் தரும் வாரம். பயணம் லாபம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில்போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மனநிறைவு உண்டாகும். குடும்ப உறவு பலப்படும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான தருணம். பணவரவு திருப்தி தரும். பல் வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். அணிகலன் சேர்க்கையுண்டு. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். காரியத்தில் வெற்றி கிடைக்கும். கனவுகளும், ஆசைகளும் நிறைவேறும். கௌரவம் அதிகரிக்கும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். ஆடம்பரப் பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். நினைத்தது நிறைவேறும். மின்சாரத்தில் கவனம் தேவை. குடும்ப கௌரவம் உயரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். கருத்து வேறுபாடுகள் அகலும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பொறுமையைக் கையாள வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: *4,5,6,9*
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,C




**கன்னி:** பணவரவு திருப்தி தரும் வாரம். சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தும் காலம். பழையக் கடன் தீரும். அச்சத்தை தவிர்ப்பது நல்லது. வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. உறவினர்களால் அலைச்சல் உண்டு. மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து போகும். திடீத் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்பால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். பணப்பிரச்சனைத் தீரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். முற்போக்கு சிந்தனை வரும். சோம்பல் அதிகரிக்கும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. குளிர்பானத் தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். பங்குத்தொழில் பணம் தரும். பெத்தவங்க ஆசியும், மத்தவங்க வாழ்த்தும் கிடைக்கும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பிரபல்ய ஆசை ஏற்படும். ஆடைரூபவ் அணிகலன் சேர்க்கையுண்டு. கண் நோய் வந்து போகும். கால்நடைகளால் லாபம் உண்டு. பரபரப்பு இல்லாமல் பணவரவு பெருகும் காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: *6,9,1,4*
அதிர்ஷ்ட நிறம்: ஊதாநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,U




**துலாம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும் வாரம். பொன் பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவு உண்டு. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். நண்பர்களால் நன்மையுண்டு. பாதகமான சூழ்நிலைகள் காணப்படும். பணியாட்கள் ஆதரவு அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உதயமாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பயணம் அனுகூலம் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சினை தீரும். வியாபாரம் சிறக்கும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். கிருபைகளும், பெருமைகளும் கிடைக்கும். காரிய வெற்றி கிட்டும். துயரங்களையும், தோல்விகளையும் தாண்டி உயரங்களைத் தொடும் காலம். குடும்ப ஒற்றுமை கூடும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகரிக்கும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. புண்ணியம் சேரும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். தோற்றப் பொலிவு கூடும். பொறியியல் துறை லாபம் தரும். ஆடை, அணிகலன் சேரும். உடல்நலம் திருப்தி தரும். தொலைநோக்கு சிந்தனை உருவாகும். விலைமதிக்க முடியாத வெகுமானம் கிடைக்கும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: *7,5,4,3*
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,J

**(தொடர்ச்சி 22 பக்கம்)**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1181



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயம்
### குப்பிளான், யாழ்ப்பாணம்

இவ்வாறாக ஆகமவிதிப்படி பெருமாற்றங்களைக் கண்ட சொக்கவளவு சோதிவிநாயகப்பெருமான் ஆலயத்திற்குரிய தீர்த்தக்கிணற்றினை, திரு. சி. பொன்னம்பலம் அவர்கள் உபயமாகக் கட்டியுள்ளார்கள். இதேவேளை திரு. தம்பையா சதாசிவம் அவர்கள், உயரமான தண்ணீர்த் தொட்டியினையும் கட்டி உதவியுள்ளார்கள். ஆலயம், மற்றும் ஆலய பூசகரின் வீட்டிற்கும் தண்ணீர் வழங்குவதற்கான நீர்க்குழாய்களை திரு. சின்னத்தம்பி சின்னையா அவர்கள் செய்து வழங்கியுள்ளார்கள். இவ்வாறான பல பணிகள் நிறைவேற்றப்பட்ட பின்னர், 1976 ஆம் ஆண்டு மீண்டும் ஆலயத்தின் குடமுழுக்குவிழா சிறப்பாக நிறைவேறியது. இக் குடமுழுக்கு விழா, அரியாலை சிவஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் தலைமையில் நடந்தேறியது. இவரே இவ்வாலயத்தின் அர்ச்சகராகச் சில ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். இவரைத்தொடர்ந்து பிரம்மஸ்ரீ ந. சபாரத்தினக்குருக்கள் அர்ச்சகராகப் பணிபுரிந்துள்ளார். இவர்களின்பின்னர் கிரியாகலாபமணி பிரம்மஸ்ரீ சிதம்பர கிருஷ்ணசாமிக் குருக்கள், பலகாலம் இவ்வாலத்தின் அர்சகராகப் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆலயப்பணிகள் சிறப்பாக அமைவதற்கு ஆலயபரிபாலன சபையினரின் ஊக்கமும், செயற்பாடும் முக்கிய காரணமாக விளங்குகின்றது. காலத்திற்குக் காலம் நிர்வாகம் மாற்றியமைக்கப்படுவது வழக்கம். இதற்கமைய வீரசிங்கம் பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக் கொண்டு நியமிக்கப்பட்ட பரிபாலன சபையில், டாக்டர் சின்னப்பு செல்வநாயகம் அவாகள் மனேஜராகவும் விளங்கிப் பணியாற்றியுள்ளனர். இவர்கள் காலத்திலும் ஆலயத்தில் பல சேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. திரு. பொன்னம்பலம் அவர்களின் பின் திரு. க.இ. ஆறுமுகம் அவர்கள் தலைவராகப் பணியாற்றியுள்ளார். இவரின் பின்னர் திரு. கந்தையா சிவலிங்கம் அவர்கள் தலைவராகப் பணிபுரிந்த வேளை, திரு. நாகையா இராமலிங்கம் அவர்கள் செயலாளராகவும், திரு. அ.சி. சொக்கலிங்கம் அவாகள் பொருளாளராகவும விளங்கி ஆலய முன்னேற்றத்திற்கு அரும்பணி புரிந்துள்ளனர். இவர்களுடைய முயற்சியினால் இக்காலப்பகுதியில் திருமதி. இராசம்மா சுவாமிநாதன் அவர்களால் கொடித்தம்ப கவசம் செய்து கொடுக்கப்பட்டது.

சிறிது காலத்தின் பின்னர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் பொறுப்பினை ஆசிரியர் சின்னத்தம்பி சிவஞானம் அவர்கள் வகித்துள்ளார்கள்.

சொக்கவளவு சோதிவிநாயகப் பெருமான், அவரது தாள்பணிந்தோர்க்கு அருள்புரிந்து பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். இவரது அருளைப்பெற்றோர் எண்ணிலடங்காதவர்களாக விளங்குகின்றனர். தமக்கு வாழ்வளித்த விநாயகப்பெருமானை வாழ்த்தி வணங்கி, விநாயகப்பெருமான் ஆலயம் எக்குறையுமின்றி எக்காலத்தும் சிறப்பாக பூசைவழிபாடுகள் நிகழ நிலங்களையும் ஆலயத்திற்கு மானியமாக வழங்கியுள்ளனர். ஆலயத் திருப்பணிகளில் ஈடுபாடு கொண்டுழைத்த திரு. பொன்னையா சுந்தரசர்மா அவர்களின் பிள்ளைகள், ஆலயத்திற்குக் கிழக்குப் பக்கமாகவுள்ள காணியை ஆலயத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளனர். இவ்வாறே சிங்கப்பூரிலே வாழ்ந்த திரு. காசிப்பிள்ளை நாகலிங்கம் என்பவர், ஆலயத்திற்குத் தென்மேற்கேயுள்ளகாணியைத் தர்மசாசனமாக ஆலயத்திற்கு வழங்கியுள்ளார். ஆரம்பகால தர்மகர்த்தாவாகவும், பரிபாலனசபைச் செயலாளராகவுமிருந்த திரு. சம்பந்தர் அவர்களின் மகன் தம்பிராசா ஆசிரியர் அவர்கள், ஆலயகாப்பாளராகவும், மனேஜராகவும் விளங்கி ஆலயவளாச்சிக்குப் பெரும்பணிபுரிந்தவர். இவர் தனது தோட்டநிலத்தை ஆலயத்திற்குத் தர்மசாசனமாகக் கொடுத்து, அதன் குத்தகைப்பணத்திலிருந்து ஆண்டுதோறும் வரும் பங்குனிமாதப் பூசையை தனது உபயமாகச் செய்யும்படி ஆலயத்திற்கு வழங்கியுள்ளார்.

இவ்வாறாக மடாலயமாக இருந்து ஆகம முறை தழுவிய ஆலயமாக வளர்ச்சி பெற்ற காலத்திலே ஈழத்திலுள்ள இந்து ஆலயங்கள் பலவற்றிற்கும் ஏற்பட்ட அழிவு சொக்கவளவு சோதிவிநாயகப் பெருமான் ஆலயத்திற்கும் ஏற்பட்டது. பல தசாப்தங்களாகத் தொடரும் இன அழிப்புப் போரின் தாக்கத்தினால் 1995 ஆம் ஆண்டு இவ்வாலயமும் அழிவுகளைச் சந்திக்க நேர்ந்தது. இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் இடம் பெயாந்து துன்பங்களை அனுபவித்த நேரத்திலே, ஆலயத்திலுள்ள பொருட்கள், வாகனங்கள், யாவும் சூறையாடப்பட்டும், சேதமாக்கப்பட்டும் அழிக்கப்பட்டது. ஆலயமும் பலத்த சேதத்திற்குள்ளானது. ஆயினும் இராணுவ நடவடிக்கைகள் சற்றுத் தணிந்து இவ்வூர் மக்கள் தமதிருப்பிடத்திற்கு வந்த காலத்திலே முதல் வேலையாக சோதிவிநாயகப் பெருமானின் ஆலயத்தைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டனர். இதன் முன்னோடியாக திரு.ச. பொன்னம்பலம் அவர்கள் தலைமையிலான பரிபாலனசபை அமைக்கப்பட்டு, விநாயகப்பெருமானுக்குப் பூசைவழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டது.

**வளரும்..**

---

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு வழங்கி, வாக்குறுதிகளை நிறைவேற்றாததால், "ஜனாதிபதி மீதான நம்பிக்கை உடைந்துவிட்டது"




கொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதாக வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி, ஒரு வருடம் ஆகியும் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், குற்றம் சாட்டப்பட்ட ஒரு இராணுவ அதிகாரிக்கு பதவி உயர்வு அளித்ததன் மூலம் அவர் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையை உடைத்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

“ஊடகவியலாளர் சுகிர்தராஜன் கொலை செய்யப்பட்டு 20 வருடங்கள் கழிந்துள்ளன. மாறி மாறி வருகின்ற ஒவ்வொரு அரசும், ஊடகவியலாளர்கள் படுகொலை குறித்த விசாரணைகளை ஆரம்பிப்போம். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த விசாரணைகளை ஆரம்பிப்போம் உள்ளிட்ட வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வருவார்கள். ஆட்சிக்கு வந்த பின்னர் தாங்கள் அளித்த வாக்குறுதியை மறந்துவிடுவார்கள். தற்போதைய ஜனாதிபதி, தோழர் அனுர குமாரவாக இருக்கும்போது பல்வேறு வாக்குறுதிகளை வழங்கினார். இதில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் குறித்த விசாரணைகளை துரிதமாக ஆரம்பித்து குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். அவர் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நிறைவு பெற்றுள்ளது. அந்த விடயம் குறித்து அவர் அவதானம் செலுத்தவில்லை.”

மட்டக்களப்பில் இடம்பெற்ற, திருகோணமலையில் ஐந்து பாடசாலை மாணவர்களின் படுகொலையை உலகிற்கு வெளிப்படுத்தியமைக்காக படுகொலை செய்யப்பட்ட சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 20ஆவது நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோது, மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளரும், ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் எஸ். நிலாந்தன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ஜனவரி 24, 2006 அன்று உயர் பாதுகாப்பு வலயமான திருகோணமலை ஆளுநர் அலுவலகத்திற்கு அருகில் வைத்து சுடர்ஒளி மற்றும் உதயன் நிருரான சுப்பிரமணியம் சுகிர்தராஜன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையின் 20ஆம் ஆண்டு நிறைவையொட்டி, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவை இலங்கையில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூரும் வகையில் மட்டக்களப்பில் உள்ள காந்தி பூங்காவின் முன் நிறுவப்பட்ட நினைவுத்தூபிக்கு முன் அவரை நினைவுகூர ஏற்பாடுகளை செய்திருந்தன.

16 வருடங்களுக்கு முன்பு ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை கடத்தி காணாமல் ஆக்கிய சம்பவத்தில், குற்றம் சாட்டப்பட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரி ஒருவரை பதவி உயர்வு அளித்ததன் காரணமாக, ஜனாதிபதி மீது வைக்கப்பட்டிருந்த நம்பிக்கை முற்றிலுமாக சிதைவடைந்துள்ளதாக எஸ். நிலாந்தன் மேலும் தெரிவித்திருந்தார்.

“ஜனாதிபதி மீதான நம்பிக்கை முற்றுமுழுதாக தகர்ந்துள்ளது. காரணம், காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் எக்னெலிகொட தொடர்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட ஒரு உயர் இராணுவ அதிகாரிக்கு அனுர குமார அரசாங்கம் பதவி உயர்வு வழங்கியுள்ளது. ஏராளமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள அவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள விடயத்தை எக்னெலிகொடவின் மனைவி ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மீது நம்பிக்கை வைத்திருந்தோம். ஆனால் அவரது செயற்பாடு எமக்கு வருத்தமளிக்கிறது.”

பிரகீத் என்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட குற்றவியல் வழக்கின் 9ஆவது குற்றவாளியான தெல்கே எரந்த ரதீஷ் பீரிஸின் நியமனம் குறித்து மனித உரிமை ஆர்வலர் சந்தியா எக்னெலிகொட, ஜனவரி 13, 2026 அன்று ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி, தனது ஆழ்ந்த வருத்தத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்தார்.

இதுபோன்ற கடுமையாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு உயர் பதவி வழங்குவது நீதித்துறை செயல்முறைக்கு இடையூறாக இருக்குமென அவர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் மேலும் வலியுறுத்தினார்.

கொலை நடந்து 20 வருடங்கள் ஆகின்றன.

திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்டமைக்கு அரசாங்க பாதுகாப்புப் படையினர்தான் காரணம் என்பதற்கான வலுவான ஆதாரங்களைக் காட்டும் புகைப்படங்களை வெளியிட்ட பின்னர், சுடர்ஒளி மற்றும் உதயன் நிருபர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்டார்.

திருகோணமலை புனித ஜோசப் மற்றும் கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்களான மனோகரன் ரஜிஹர், யோகராஜா ஹேமச்சந்திரன், சண்முகராஜா கஜேந்திரன், லோகிதராஜா ரோஹன், தங்கத்துரை சிவானந்தா ஆகியோர் ஜனவரி 2, 2006 அன்று குண்டுகள் வெடித்து இறந்ததாக இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் ஊடகங்கள் மூலம் அரசாங்கமும் பாதுகாப்புப் படையினரும் மேற்கொண்ட பிரச்சாரத்தை சுகிர்தராஜனின் புகைப்படங்கள் மறுத்தன.

தனது பணியின் போது துணிச்சலான ஒரு தகவலை வெளியிட்ட இரண்டு வாரங்களுக்குப் பின்னர் தனது உயிரையே தியாகம் செய்த ஊடகவியலாளருக்கு இரண்டு தசாப்தங்களாக நீதி கிடைக்கவில்லை.

“தெற்கில் உள்ள பெரும்பான்மையான சிங்களவர்களுக்குத் தெரியாத சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் கடினமான வாழ்க்கை, உண்மை மற்றும் துணிச்சலான ஊடக நடைமுறைக்கு ஒரு அரிய எடுத்துக்காட்டு” என மூத்த ஊடகவியலாளர் அதுல விதானகே, ஊடகவியலாளர் கொலை செய்யப்பட்ட பத்து வருடங்களுக்குப் பின்னர் ஜே.டி.எஸ் இணையதளத்தில் எழுதினார்.



# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். புண்ணியம் சேரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். வேண்டிய உதவி கிட்டும். வாகனயோகம் அதிகரிக்கும். வகையான செல்வம் சேரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் நன்மை தரும். செலவுகள் தவிர்க்கவும். வேலைப்பளு அதிகரிக்கும். பொறாமைகள் விலகும். புதியப்பொருள் சேரும். வழக்குகள் திருப்பம் தரும். செல்வாக்கு அதிகமாகும். இடமாற்றம் நன்மை தரும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலம் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். அரசியலில் பொறுமை தேவை. வீண் வம்பு விலகும். பாதகமான சூழ்நிலை விலகும். வினோதமான எண்ணங்கள் விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. ஆசைப்பட்ட வாழ்க்கை அமையும். பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. தொழில் போட்டி அதிகமாகும். மருத்துவச் செலவு கூடும். பணவரவு திருப்தி தரும். முயற்சிகள் பலிதமாகும். சேமிக்கும் எண்ணம் மேலோங்கும். தனவரவு பெருகும். மேன்மைகள் அதிக அளவில் நடைபெறும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். வீண் வம்பு அகலும். வியாபாரத்தடை ஏற்படும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். உடல் உபாதை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: *3,1,9,6*

அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,P




**தனுசு:** கலகலப்பான வாரம். வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினரால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றியை தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைகூடும். வேலை பளு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றியைத் தரும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். சாதுரயமான பேச்சுக்களால் சாதகமான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். பணவரவு உண்டு. திருப்புமுனை ஏற்படும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். காதல் கசக்கும். விவசாயம் பலன் அளிக்கும். பாதகம் விலகும். பொன், பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டாகும். மங்களச் செய்தி வரும். குடும்ப வளர்ச்சி கூடும். பழையக் கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். கல்வியில் ஆர்வம் கூடும். கட்டிட தொழில் லாபம் தரும். பங்குத்தொழிலில் கவனம் தேவை. பதவி வாய்ப்பு வரும். பிள்ளைகளால் தொல்லைகள் உண்டு. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகனச் செலவுகள் ஏற்படும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: *9,5,4,7*

அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**மகரம்:** நியாயமான ஆசைகள் நிறைவேறும் வாரம். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கடன் வாங்க நேரி டும்.கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. தொழில் வாய்ப்பு கூடி வரும். பிரபல்ய ஆசை ஏற்படும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தகுதிகள் மிகுதியாகும். மனநிறைவுகள் உண்டாகும். குடும்ப உறவு பலப்படும். மிகையான நன்மைகள் கிட்டும். முறிந்து போன உறவுகள் மகிழ்ந்து வந்து இணையும் காலம். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கலகலப்பான செய்திகள் வரும். ஆபத்துக்கள் விலகக்கூடிய மகத்தான காலம். ஆலய தரிசனத்தால் ஆத்ம பலன் பெறக்கூடிய அற்புதமான காலம். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. திட்டம் வெற்றி பெறும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். திருப்பு முனை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். சாதனையான எண்ணங்கள் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: *7,9,4,3*

அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**கும்பம்:** எதார்த்தமாக செயல்படும் வாரம். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மேலான ஆசியும் மேதைகளின் நட்பும் கிடைக்கும். வீடு, மனை வாங்கும் யோகம் கிடைக்கும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். விளையாட்டுத் துறையில் லாபம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். வேலைப்பளு அதிகரிக்கும். ஐஸ்வர்யம் சேரக்கூடிய அற்புதமான காலம். ஆபரணப் பொருள்கள் சேரும். எண்ணிய காரியம் கைக்கூடும். தொழிலில் எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலை தொடரும். ராகு காலப் பிரார்த்தனையால் "ராஜயோகம்" கிடைக்கும். நன்மதிப்பு உருவாகும். வாடும் நிலை விலகி வீடு நிலமும் வாங்கும் காலம். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மனிதரால் வசதி உண்டு. பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியலில் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்ப தொல்லைத் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்புக்கள் கூடி வரும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மை தரும். அளவான பேச்சு ஆறுதல் தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டுக் கிட்டும். மகிழ்ச்சியான செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவிஷ்ணு, அதிர்ஷ்ட எண்: *4,1,3,5*


அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**மீனம்:** ஆதாயம் கிடைக்கும் வாரம். உற்சாகம் மேலோங்கும். வறுமை நிலை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்பேச்சில் நிதானம் தேவை. நிர்வாக அலைச்சல் கூடும். வெளியூர் பயணம் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. வியாபார லாபம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. சொந்த தொழில் அமையும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். துன்பம் விலகும் காலம். மனைவி மக்களால் மகிழ்ச்சி ததும்பும். தீய எண்ணம் விலகும். அரசு பணியில் மாற்றம் வரும். நிதி நிலைமை சீராகும். மற்றோரின் வாழ்த்துக் கிடைக்கும். புத்தாடை ஆபரணம் சேரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். கடனால் பிரச்சனை வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். மனதெளிவு கிட்டும். கலைத்தொழில் உயர்வு பெறும். வம்புதும்புகள் ஒழியும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். வெளியூர் பயணம் லாபம் தரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எதிலும் நிதானம் தேவை. புத்தாடை சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. அரசு உதவிகள் கிடைக்கும். கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்களிடம் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். தொழில் சிக்கல் மறையும். நிம்மதி பெருகும். இனிய செய்தியால் மனம் மகிழும். இடமாற்றம் தடைப்படும். கமிஷன் தொழில் லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. எதிரிகள் பலம் குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: *8,4,3,1*

அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P




இனிய
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal &
Tamil Heritage Month
எமது வாக்காளப் பெருமக்கள், நண்பர்கள் மற்றும்
அனைத்து தமிழ்க் கனேடியர்களுக்கும்,
இனிய தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம் சார்பான வாழ்த்துக்கள்!
ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org








26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1556 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday January 30, 2026

## கனடிய உயர்மட்ட அமைச்சர்களும் இலங்கை மற்றும் இந்திய தமிழ்க் குடும்பங்களின் வம்சாவழிகளுமான இருவர் கலந்து சிறப்பித்த ஆளும் கட்சியின் வருடாந்த பொங்கல்விழா!



வருடா வருடம் தவறாது நடைபெறும் பொங்கல் விழா மற்றும் தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம் ஆகியவற்றை கனடாவின் ஆளும் கட்சிக் குழு நடத்துவது முக்கிய நிகழ்வாக அமையும்.

அந்தவகையில், கனடிய அரசின் உயர்மட்ட அமைச்சர்களும் இலங்கை மற்றும் இந்திய தமிழ்க் குடும்பங்களின் வம்சாவழிகளுமான முறையே. கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டு அமைச்சு ஆகியவற்றின் அமைச்சர்சகளான ஹரி ஆனந்தசங்கரி மற்றும் அனிற்றா ஆனந்த் அத்துடன் மற்றுமொரு தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா ஆனந்த் ஆகியோரும் பத்துக்கு மேற்பட்ட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்த ஆளும் கட்சியின் வருடாந்த பொங்கல்விழா ஒட்டாவா மாநகரில் 27-01-2026 அன்று செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்றது.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## ”ஒன்றாரியோவில் உள்ள பல்லின ஊடகங்களின் பலத்தையும் அரசுகளுக்கான அவற்றின் தேவைகள் மற்றும் சவால்கள் பற்றியும் கனடிய பிரதமருக்கு எடுத்துச் சொல்வேன்”

### பல்லின ஊடகங்களின் முக்கியஸ்த்தர்களுடன் நடத்திய வட்ட மேசை சந்திப்பில் ஒன்றாரியோ மாகாண எதிர்க்கட்சித் தலைவி Marit Stiles உறுதி

”ஒன்றாரியோ மாகாணத்திலும் மற்றும் பிற மாகாணங்களிலும் இயங்கிவரும் உள்ள பல்லின ஊடகங்கள் தற்போது மிகுந்த நிதி நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளதை அரசியல்வாதிகளான நாம் நன்கு அறிவோம். அதேவேளை அவற்றின் பலம் பற்றியும் மேற்படி பல்லின ஊடகங்களினால் அரசாங்கத்திற்கும் அரசியல்வாதிகளுக்கும் மற்றும் வர்த்தகர்களுக்கும் வாசகர்களுக்கும் உள்ள பலன்கள் பற்றியும் நாம் அறிவோம். இவ்வாறான நிலையில் அண்மையில் எமது கனடியப் பிரதமர் சுவிற்சலாந்தில் உலக பொருளாதார மாநாட்டில் ஆற்றிய உரையை முக்கியத்துவம் கொடுத்து தங்கள் முன்பக்கத்தில் பல பல்லின ஊடகங்கள் பிரசுரித்தும் ஒளிபரப்புச் செய்தும் உள்ளதை நான் இன்று நேரடியாகக் காண்கின்றேன். அவ்றறுள்ள கனடா உதயன் வாரப் பத்திரிகையும் ஒன்று என்பதை காண்கின்றேன்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)





## யாழ்ப்பாண மருத்துவ பீட மாணவி விதுனி பஸ்நாயக்கவின் சிங்கள மொழி கட்டுரை நூல் வெளியீட்டு விழாவை ஏற்று நடத்திய பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியம்!

யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவி விதுனி பஸ்நாயக்க எழுதிய “உத்துரு கோண அருமசிய” (வடக்கு மூலையின் அதிசயம்) என்னும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு கடந்த 25.01.2026 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி வளாகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மருத்துவபீட மாணவர் ஒன்றியம், சமுதாய மருத்துவத்துறை, மற்றும் மாணவர் வளநிலையம் இணைத்து நடாத்திய குறித்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரன் கலந்து கொண்டார்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)






1957 இல், தனிச் சிங்களச் சட்டம் அமுலான பின்னர், இலங்கையில் வாகனத் இலக்கத் தகடுகளில் சிங்கள ”ஸ்ரீ” எழுத்தைப் பயன்படுத்தியதற்கு எதிராகத் தமிழரசுக் கட்சி தலைமையில் போராட்டம் வெடித்து சிங்கள ”ஸ்ரீ” எழுத்து கறுப்பு மை பூசப்பட்டு, தமிழ் ”ஸ்ரீ” யாக மாற்றப்பட்டது.

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிங்கள "ஸ்ரீ"யும் தமிழ் "ஸ்ரீ"யும்

இந்த போராட்டமே தமிழரசுக்கட்சியின் வளர்ச்சிக்கும் இருப்புக்கும் பலமான அடித்தளமாக அமைந்தது. ஆனால் அதே தமிழரசுக்கட்சி தற்போது தமது கட்சியிலுள்ள மக்கள் பலமான தமிழ் “ஸ்ரீ“க்கு (ஸ்ரீதரனுக்கு) எதிராக முன்னெடுக்கும் சதி தமிழரசுக் கட்சியின் அடித் தளத்தை, மக்கள் பலத்தை ஆட்டம் காண வைக்கப் போகின்றது- கே.பாலா

தமிழரசுக்கட்சியின் தலைவராக பொதுக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீதரனை சட்ட சதியினால் அப்பதவியை ஏற்கவிடாது தடுத்தவர்கள் தற்போது அவரை பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கு முயலுகின்றார்கள்?

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

